இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

மாதமிரு இதழ் — 459 ● 1995 ஏப்ரல் 7 வெள்ளிக்கிழமை

**உள்ளே:**

**சோவியத் யூனியனில் ஸ்டாலினிசத்துக்கு மாற்றீடு இருந்ததா?**

முன்னைய சோவியத் யூனியனின் பிரபல மார்க்சிச வரலாற்றாசிரியர் பேராசிரியர் வடிம் றொகோவினின் அமெரிக்க விரிவுரை

**பக்கம் 4 - 5**

## தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்கள் மாநாடு:

# புரட்சிகரத் தலைமையைக் கட்டியெழுப்பச் சபதம்

கடந்த மார்ச் 19ல் கூடிய தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்கள் மாநாடு அனைத்துலக சோசலிசத்துக்கான புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் மக்களை அணிதிரட்டும் ஒரு தலைமையைக் கட்டியெழுப்ப ஏகமனதாகத் தீர்மானம் செய்தது.

இருநூறுக்கும் அதிகமான பேராளர்கள் கலந்துகொண்ட இம்மகாநாடு கொழும்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றதோடு இது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் கூட்டப்பட்டிருந்தது.

அட்டன், பதுளை, எல்பிட்டி போன்ற தூர இடங்களில் இருந்து வருகை தந்த தோட்டத் தொழிலாளர்கள், கொழும்பு சுற்றுப்புறங்களை சேர்ந்த கைத்தொழில் வலயங்களின் இளைஞர், யுவதிகள், மொனராகல, தம்புத்தேகம போன்ற கிராமப்புறங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் பல்கலைக் கழக மாணவர்கள், தொழிலற்ற இளைஞர்கள், தாதிகள், வங்கி ஊழியர்கள் சிலாபப் பகுதியினைச் சேர்ந்த மீனவர்கள் என்போர் இம்மகாநாட்டில் கலந்துகொண்டோரில் அடங்குவர்.


புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்த மகாநாட்டுக்கான அழைப்பு விடுத்து தொழிலாளர் வர்க்கத்துக்கு அவசியமான 'புதிய முன்னோக்கினையும் தலைமையையும் கட்டியெழுப்புவோம்' என்ற தலைப்பில் 1995-02-03ல் ஒரு அறிக்கையை வெளியிட்டு இருந்தது. இந்த அறிக்கை ஒரு சிறு பிரசுரமாக தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்களிடையே வெளியிடப்பட்டது. பு. க. க. அங்கத்தவர்கள் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் வதிவிடங்களிலும் வேலைத்தலங்களிலும் இந்தப் பிரசுரத்தினை விற்பனை செய்ததன் மூலம் இம்மகாநாட்டினை கட்டியெழுப்பும் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இந்தப் பிரச்சார இயக்கத்தின் ஒரு பாகமாக அட்டன், மொரட்டுவை, அம்பலாங்கொடை, கம்பஹா, கண்டி, ஹோமாகம, சிலாபம், பதுளை, மொனராகல முதலான இடங்களில் முன்னோடி மகாநாடுகளை நடாத்தவும்—பு.க.க. தோழர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

மார்ச் 19ம் திகதிய மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிய பு.க.க. மத்திய குழு உறுப்பினர் சுனில் தமது தலைமை உரையில் "புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்கள் மாநாடு தொழிலாளர் வர்க்கம் உலகளாவிய ரீதியில் தீர்க்கமான திருப்பத்துக்கு வந்துள்ள காலகட்டத்தில் இடம்பெறுகின்றது" எனக் குறிப்பிட்டார். தொழிலாளர் வர்க்கம் தனது கடந்த கால போராட்டங்கள் மூலம் வென்றெடுத்த சகல உரிமைகளையும் இழக்கும் நிலைமைக்கு முகம் கொடுத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள மிலேச்சத் தாக்குதல்களின் தன்மையை தோழர் சுனில் தெளிவுபடுத்தினார். சமசமாஜ - ஸ்டாலினிச - நவசமசமாஜ — இ. தொ. கா. உள்ளடங்களான துரோகத் தலைவர்கள் இத்தாக்குதல்களைத் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் மீது திணிக்கும் அப்பட்டமான ஏஜன்சிகளாகச் செயற்படும் முறைமையை தெளிவுபடுத்திய சுனில் அந்நிலைமையினுள் தொழிலாளர் வர்க்கத்துக்கு புதிய முன்னோக்கினதும் தலைமையினதும் அவசியம் பெரும் தீர்க்கமானதாகியுள்ளது என வலியுறுத்தினார்.

### நல்வாழ்த்துக்கள்

மகாநாட்டின் அரசியல் அறிக்கையை பு.க.க. பொதுச் செயலாளர் தோழர் விஜே டயஸ் முன்வைத்தார். அவர் தமது அறிக்கையை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் பூண்ட இந்திய ட்ரொட்ஸ்கிச சோசலிசத் தொழிலாளர் கழகத்தினால் மகாநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நல்வாழ்த்துச் செய்திகளை சமர்ப்பிப்பதோடு ஆரம்பித்தார்.

(7ம் பக்கம் பார்க்க)



மார்ச் 19ல் மாநாட்டுக்கு வருகை தந்தோரில் ஒரு பகுதியினர்

# பொதுஜன முன்னணி துப்பாக்கிக்கு இலக்கான சு.வ.வ. தொழிலாளி மரணம்

கடந்த செப்டம்பரில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பொலிசார் பியகம சுதந்திர வர்த்தக வலய தொழிலாளரின் 'நடைபவனி'யின் மீது நடாத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான அன்சல்—லங்கா கம்பனி தொழிலாளியான கே.ஏ. பிரேமரத்ன மார்ச் 24ம் திகதி மரணமானார்.

பிரேமரத்னவுக்கு இறுதி மரியாதை செலுத்தும் பொருட்டும் மரணம் தொடர்பாக தமது சோகத்தையும் கொலையாளிகளின் மீதான வெறுப்பையும் தெரிவிக்கும் பொருட்டும் சுதந்திர வர்த்தக வலயத்தையும் மற்றும் வேலைத் தலங்களையும் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் அவரின் இல்லத்துக்கு பெருக்கெடுத்து வந்தனர்.

பிரேமரத்ன கொலைசெய்யப்பட்டது பொதுஜன முன்னணி அரசாங்கத்தினாலேயே என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் சுயாதீன தொழிலாளர் விசாரணைக் குழுவும் அழுத்தம் திருத்தமாக கூறி வைக்கின்றன.

அன்சல்-லங்கா 'நடவடிக்கை குழு' என்ற பேரில் தொங்கிக் கொண்ட ஸ்டாலினிஸ்டுகளும், ஜே வீ.பீ. பாசிஸ்டுகளும் அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் பேச்சாளர்களும் நிகழ்த்திய பிற்போக்கு வாய்வீச்சு 'இரங்கலுரை'களுக்கு காத்திராமல் தொழிலாளர்களில் பெரும் பகுதியினர் கலைந்து சென்றதைக் காணக்கூடியதாய் இருந்தது. இந்த ஸ்டாலினிஸ்டுகளும் ஜே. வீ. பீ கும்பலும் ஒன்றிணைந்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், சுயாதீனத் தொழிலாளர் விசாரணைக் குழுவும் இறுதி யாத்திரைக்கு முன்னதாக இரங்கலுரை நிகழ்த்துவதை தடை செய்தனர்.

(8ம் பக்கம் பார்க்க)

- உலகத் தொழிலாளரே ஒன்றுபடுங்கள்!
- அனைத்துலக சோசலிசத்துக்காக போராடுங்கள்!
- சிறிலங்கா-ஈழம் சோசலிசக் குடியரசை கட்டிஎழுப்பு!

## மே தினம் 95

கூட்டம் மாலை 5 மணி
கொட்டாஞ்சேனை ரத்தினம் திடலில்
ஊர்வலம் பிற்பகல் 2 மணி நியூகம் சதுக்கம்
(கொச்சிக்கடை அந்தோனியார் கோவில் அருகில்)
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்-இளம் சோசலிஸ்டுகள்

## வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!

# விடுதலைப் புலிகள் - பொதுஜன முன்னணி சமரசத்துக்கு ஏகாதிபத்தியவாதிகள் ஊக்கம்

கடந்த சில வாரங்களாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே இழுபறிப்பட்டுக் கொண்டிருந்த ''சமாதானப் பேச்சுவார்த்தை'' தற்போது ஏப்ரல் பத்தாம் திகதி தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 14ம் திகதி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கு கடிதம் வரைந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே பிரபாகரன் மூன்று முக்கிய கோரிக்கைகள் பற்றி மார்ச் 28ம் திகதிக்கு முன் தீர்வு கிடைக்காது போனால் ''விசனத்துக்குரிய'' விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி வரும் என இறுதி எச்சரிக்கை விடுத்ததாக தெரியவருகிறது. எரிபொருள், உணவுப் பொருட்களின் மீதான வடக்குத் தடையை முற்றாக நீக்குதல். மீன்பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை அடியோடு நீக்குதல், பூநகரி இராணுவ முகாமை அகற்றி, போக்குவரத்துக்காக அப்பாதையை திறந்துவிடுதல் என்பனவே இம்மூன்று முக்கிய கோரிக்கைகளாகும், முதல் இரு கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட வாய்ப்பு உண்டு என ஜனாதிபதி உறுதியளித்ததைத் தொடர்ந்து மூன்றாவது கோரிக்கையைக் கைவிட்டு விட்டு பேச்சுவார்த்தைக்கு வர விடுதலைப் புலிகள் இணங்கியுள்ளனர்.

யுத்தத்தை நிறுத்தி 'சமாதானத்தை' நிலைநாட்டுவதே பொதுஜன முன்னணி அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட முக்கிய பொறுப்பு என ஏகாதிபத்தியவாதிகளும், இலங்கை முதலாளித்துவ வர்க்கமும், சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ தொ. கா, துரோகத் தலைமை அமைப்புக்களும் தற்போது வலியுறுத்தி வருகின்றன. முதலாளித்துவ பத்திரிகை கும்பல் ''சமாதான பேச்சுவார்த்தை''க்கு ஆதரவாகவும் எதிராகவும் பொய் புரட்டுக்களை புனைந்துரைத்து தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களை கலக்கிக் குழப்பும் இயக்கத்தில் ஈடுபட்டுள்ளன, தொழிலாளர்—ஒடுக்கப்பட்ட மக்கள் இத்தகைய மாயத் திரையைக் கிழித்து, உண்மையை உணர்ந்து தெளிவுபடுவது தற்சமயம் அவசியமாகும். ''சமாதான பேச்சுவார்த்தை'' முயற்சி என்பதன் உண்மையான எதிர்ப் புரட்சிகர நோக்கை உணர்ந்து கொள்ள வேண்டும். சமாதான பேச்சுவார்த்தை முயற்சி எனப்படுவது யாருடைய நோக்கத்தை நிறைவேற்ற உருவானது?

கொடிய இனவாத யுத்தத்தை நிறுத்துவதும், சமாதானத்தை நிலைநாட்டுவதும், வடக்கு — கிழக்கு தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதும் வடக்கு — கிழக்கிலும், சிறீலங்காவிலும் வாழும் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களது மிக இன்றியமையாத ஓர் தேவை ஆகும். எனினும் பொதுஜன முன்னணி அரசாங்கம் வேறொரு காரியத்தில் ஈடுபட்டுள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கமானது கொடிய யூ என் பி. அரசாங்கத்தின் ஆட்சிக்கு எதிராக மக்களின் வெறுப்பும், எதிர்ப்பும், புரட்சிகர கிளர்ச்சியும் வெடித்த சமயத்திலேயே பதவிக்கு வந்தது. இத்தகைய புரட்சிகர கிளர்ச்சியை நசுக்கித் தள்ளி பொதுமக்களை தண்டித்து வெளிநாட்டு முதலீட்டாளருக்கு இடமளிக்கும் முகமாக செயல்படவேண்டும் என ஏகாதிபத்தியவாதிகளும் இலங்கை முதலாளிகளும் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

கடந்த சில வாரங்களாக ஏகாதிபத்தியவாதிகள் பல்வேறு வழிகளிலும் இந்த ''சமாதானப் பேச்சுவார்த்தை''யில் ஈடுபட்டனர். அமெரிக்க பிரதி வெளிநாட்டு அமைச்சர் ரொமின் ரபேல் செனட் உபகுழுவுக்கு மார்ச் 7ம் திகதி பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

''...சிறிலங்கா அரசாங்கம் இந்த வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளதை நாம் நன்கறிவோம். அது திறந்த மனத்துடன் உணர்ச்சிபூர்வமாக இயன்றளவு செயற்படுகின்றது. அதே விதத்தில் நீண்டதும் பூரணமானதுமான சமாதானத்தை எதிர்கொள்ளும் விதத்தில் செயற்பட்டு தற்போதைய அரசியல் வேலைத் திட்டத்தில் தம்மையும் ஈடுபடுத்தும்படி நாம் விடுதலைப் புலிகளை கோருகிறோம்.''

இதேவிதமான அறிக்கையையே இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவரும் வெளியிட்டார். ஐரோப்பிய நாடுகளின் ஒன்றியமும் ''சமாதானப் பேச்சுவார்த்தையை'' முன்னெடுத்து செல்லுமாறு விடுதலைப் புலிகளை நிர்ப்பந்திக்கும் விதத்திலேயே அறிக்கைகளை கடந்த வாரத்தில் மீண்டும் வெளியிட்டது. அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சரும் இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்ல உதவத் தயார் என்று அறிவித்துள்ளார்.

இந்த ''சமாதானப் பேச்சுவார்த்தை'' எனப்படுவதை பொதுஜன முன்னணி அரசாங்கம் நடாத்த நிர்ப்பந்திப்பதில் ஏகாதிபத்தியவாதிகள் பெரிதும் கலந்துள்ளனர் என்பதற்கு இதனைவிட வேறு சாட்சியங்கள் அவசியமா? ஏப்ரல் 27, 28ம் திகதிகளில் பாரிசில் நடக்கவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன் ''சமாதானத்துக்கான அறிகுறி'' எதையாவது காட்டிக்கொள்ளும் பட்சத்தில் கடனுதவி, முதலீட்டாளரின் ஊக்குவிப்பு என்பன தனக்கு கிடைக்கலாம் என்று பொதுஜன முன்னணி அரசாங்கம் கணக்குப் போட்டுள்ளது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான ''சமாதான பேச்சுவார்த்தை முயற்சி'' என்பதன் நோக்கங்கள் வருமாறு:-

(1) இலங்கை முதலாளித்துவ அரச படைகளும், பிற்போக்கு சக்திகளும், ஈழப் பிராந்திய விடுதலைப் புலிகளின் யுத்த இயந்திரமும், தமிழ் முதலாளித்துவ சக்திகளும சேர்ந்து தீவு பூராவும் உள்ள தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக அணிதிரள்வது,

(2) ஏகாதிபத்திய முதலீட்டாளர்களுக்கு இதன் மூலம் மிலேச்சச் சுரண்டலுக்கான நிலைமைகளைச் சிருஷ்டிப்பது.

இத்தகைய ஓர் ''சமாதான பேச்சுவார்த்தை''களால் வடக்கு — கிழக்கு மக்களின் உரிமைகள் கிடைத்துவிடாது. இதுமுழுத்தீவிலும்உள்ள மக்களையும ஏகாதிபத்தியவாதிகளின மிலேச்சத்தனமான காலனித்துவ சுரண்டலுக்கும் அரசியல், பொருளாதார ஒடுக்குமுறைக்கும் கீழ்ப்படுத்தும் புதியதொரு கால கட்டத்தின் ஆரம்பமாக உள்ளது. இதன்மூலம் முழு மக்களுக்கும் எதிரான வர்க்க யுத்தத்தின் புதியதோர் கால கட்டம் உருவாகி உள்ளது.



சந்திரிகா குமாரதுங்க


## தமிழ் முதலாளித்துவ வேலைத்திட்டம்

தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் கிளர்ச்சி நீதியானதும் நியாயமானதுமாகும். எனினும் இந்த போராட்டத்தின் மேல் பாய்ந்து கொண்டுள்ள தமிழ் முதலாளித்துவ வர்க்கத் தலைமை அதனைத் தமது வர்க்க நலன்களைப் பாதுகாக்க பயன்படுத்த முயல்கிறது. தமது நலன்களை காக்கும் பேரம்பேசலில் ஈடுபட்ட தமிழ் முதலாளித்துவ தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அம்பலமாக்கப்பட்டு செல்வாக்கு இழந்த நிலைமையில், பொது மக்கள் மத்தியில் குதித்து அதிகாரத்தைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் இன்று விசேடமாக வடக்கின் முதலாளித்துவக் கட்சித் தலைமையாக மாறியுள்ளது.

இனவாத ஒடுக்குமுறையில் இருந்து மக்களைப் பேணுதல், ''சுயபூர்த்தி பொருளாதாரத்தை'' ஏற்படுத்துதல் என்ற தேசியவாத கதையளப்பில் ஈடுபட்டு பொதுமக்களிடையே அதிகாரத்தை கைப்பற்றிக்கொண்ட விடுதலைப் புலிகளுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தினரின் எதிர்ப்பு உக்கிரமடைந்து வருகிறது. உலக பொருளாதாரம் பூகோளமயமாகியுள்ள நிலைமையின்கீழ் இன்று ஏகாதிபத்திய முதலீட்டாளருடன் தமது வர்க்க நலன்கள், சலுகைகளை தொடர்ந்து எப்படி பேணுவது என்ற நெருக்கடி நிலைமையை தமிழ் முதலாளித்துவ வர்க்கம் எதிர்கொண்டுள்ளது. புலம் பெயர்ந்து ஏகாதிபத்திய நாடுகளில் நன்றாக பணம் சம்பாதித்த தமிழ் முதலாளிகள், தொழில் சார் நிபுணர்கள் உட்பட்ட உயர் மத்தியதர வர்க்கத்தினர் தேசிய ஏஜந்துகளாக தாம் தலைமை ஏற்கும் ஆவலில் துடிதுடித்த வண்ணமுள்ளனர், ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் ஏஜண்டுகளாக மாறத் துடித்துக் கொண்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளது தலைமையின புதிய வலதுசாரிப் பரிணாமத்தின் பின்னணியில் உள்ள நிலைமை இதுவே. இன்று, ஏகாதிபத்தியவாதிகளின் ஆலோசனைப் பிரகாரம் சிங்கள முதலாளித்துவ வர்க்கத்துடன் கூட்டுச்சேர்ந்து தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கும் மிலேச்ச எதிர்ப்புரட்சித் தாக்குதலை நடத்த விடுதலைப் புலிகள் தயாராகவுள்ளது. அதேபோன்று ஏகாதிபத்தியத்தின் ஆசீர்வாதம் கிடைத்தால், யுத்தத்தை தொடர்ந்து நடத்தவும் விடுதலைப் புலிகள் ஆயத்தமாக உள்ளது.

''எமக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் தோல்வியடையும் நிலையில் வெளிநாடுகளின் தலையீட்டை நாம் ஆவலுடன் ஏற்போம்'' என விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.



வே. பிரபாகரன்

## சமசமாஜ—கம்யூனிச— நவசமசமாஜ— இ. தொ. கா.

இந்த அமைப்புக்கள் அரசாங்கத்துக்குள்ளேயும் அதனைச் சூழவும் இப்பேச்சுவார்த்தைகளால் சமாதானமும், யுத்த நிறுத்தமும் ஏற்படப்போகிறது என பெரிதுபடுத்திக் காட்டி பிரச்சாரம் செய்கின்றன. யுத்தம் நிறுத்தப்பட்டு ஏகாதிபத்திய முதலீட்டாளர் இங்கு வருகை தருவதால் ஏற்படப்போகும் விளைவுகளையிட்டு சமசமாஜ தலைமைகள்கட்சிக்குள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்:

இதே சமயம் நவசமசமாஜ தலைமை தமிழ் முதலாளித்துவ தலைமையால் சமர்ப்பிக்கப்பட்ட 'நான்கு அம்சக் கோரிக்கை'யை ஏற்பதே தீர்வுக்கான வழி ஆகும் எனக் கூறி வருகின்றது. இச் சகல தலைமைகளும் ஏகாதிபத்தியத்தினதும் தேசிய முதலாளித்துவ வர்க்க தலைமையினதும் வேலைத் திட்டத்தையே தலையில் சுமந்து கொண்டுள்ளன. இவையாவும் தொழிலாளர் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான மற்றும் ஓர் அநீதியை இழைக்க வேலைபார்க்கின்றன.

## தொழிலாள வர்க்க வேலைத்திட்டம்

இச் சகல நடவடிக்கைகளும் பொதுஜன மக்கள் முன்னணி அரசாங்கத்தின் ''சமாதான முயற்சி'' முழுத்தொழிலாள ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக கட்டவிழ்க்கப்பட்டுள்ள மிலேச்ச எதிர் புரட்சி நடவடிக்கையின் முக்கிய அம்சம் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. ''சமாதான முயற்சி'' எனப்படுவது பலனளிக்காவிடின் ஏகாதிபத்திய பக்கபலமுடன் யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதே அரசாங்கத்தின் திட்டம்.

ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தேசிய உரிமைகளைப் பேண முதலாளித்துவ வர்க்கத்தின் எந்தவொரு பிரிவும் இலாயக்கற்றது. இந்த முதலாளிகள், தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களை நசுக்கி ஒடுக்கும் முதலாளிகளுடனும் ஏகாதிபத்தியத்துடனும் கருப்பையில் உருவாகிய நாளில் இருந்தே தொடர்புபட்டுள்ளனர். இது இலங்கையில் சிங்கள முதலாளித்துவ வர்க்கத்தினதும் தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தினதும் செயற்பாடுகள் மூலம் நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. தேசிய, இன வேறுபாடுகளைத் தாண்டி உலக பொருளாதாரத்துக்கு ஏற்ற தொடர்புகளை நிறுவுவதையும், சுரண்டலை ஒழித்துக்கட்டுவதையும், அனைத்துலக தேவையாகக் கொண்ட தொழிலாள வர்க்கத்தால் மட்டுமே இப்பிரச்சினைகளை தீர்த்து வைக்க முடியும்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ''சமாதான முயற்சி'' எனப்படும் எதிர்ப் புரட்சி நடவடிக்கைகளுக்கு எதிராக இலங்கையிலும், ஈழத்திலும் உள்ள தொழிலாளர் வர்க்கம் ஒருங்கிணைய வேண்டும். ஏனைய ஒடுக்கப்படும் மக்களை தன்னைச் சூழ அணிதிரட்டிக்கொண்டு அனைத்துலக தொழிலாள வர்க்கத்தின் ஆதரவுடன் இலங்கை — தமிழ் ஈழ சோசலிசக் குடியரசுக்காக போராடவேண்டும். பாட்டாளி வர்க்க வேலைத்திட்டம் இதுவே.

★ சமாதானம் என்ற பெயரில் உருவாகும் எதிர்ப் புரட்சி முதலாளித்துவ ஒப்பந்தம் வேண்டாம்!

★ வடக்கு — கிழக்கில் இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்று!

★ இந்த யுத்தம் எமது யுத்தமல்ல! யுத்தத்திற்கென ஒரு சதத்தையோ, ஒரு மனிதனையோ ஒரு கருவியையோ வழங்காதே!

★ சிறிலங்கா — தமிழ் ஈழத்தில் தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலகவாத ரீதியான ஒருங்கிணைப்பை நிலைநாட்டு!

★ தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டு!

அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நாலகாம் அகிலத்தின் இலங்கைக்கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சமர்ப்பிக்கும்வேலைத் திட்டம் இதுவே.

# கைது செய்யப்பட்ட சகல தோட்ட இளைஞர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்!

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அறிக்கை

1995–4–4

அட்டனிலும் அதனைச் சூழவுள்ள தோட்டங்களிலும் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள சகல தோட்டத் தொழிலாளர் இளைஞர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது. இந்த இளைஞர்களை, விடுதலை செய்யப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொடுத்துள்ள பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவு வழங்குமாறு நாம் சகல தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றோம். இந்த பிரச்சார இயக்கத்தினைச் சூழ தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவை திரட்டவும் அவசியமான சட்ட நடவடிக்கைகளை எடுக்கவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ''தோட்டத் தொழிலாளர்கள் பாதுகாப்பு குழு''வை நிறுவியுள்ளது.

கைது செய்யப்பட்ட இளைஞர்களை தடுத்து வைத்துக் கொண்டுள்ளதாக கூறப்பட்ட – உடபுசல்லாவை பொலிசில் அதுபற்றி விசாரிக்கச் சென்ற பு.க.க. பிரதிநிதிகள் அங்கு புதிய ஜனநாயக முன்னணியின் செயலாளர் டாக்டர், சாந்திகுமார் மட்டுமே தடுத்துவைக்கப்பட்டுள்ளதை அறிந்தனர்.

28 இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக எமக்குக் கிடைத்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட போதிலும் தமது காவலில் 15 பேர் மட்டும் இருப்பதாயும் ஏனையோர் வேறு பொலிஸ் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளதாயும் அந்த நிலையங்களின் விபரங்களை பு. க. க. வுக்கு தெரிவிக்க முடியாது எனவும் உடபுசல்லாவை தலைமைக் காரியாலய பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றிய தகவல்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட ஐ.சீ.ஆர்.சீ, கொழும்பு பொலிஸ் தலைமை அலுவலகம் என்பனவும் பு.க.க. விசாரணைகளுக்குப் பதிலிறுக்க மறுத்துவிட்டன. தொழிலாளர்-ஒடுக்கப்படும்-மக்களுக்கு எதிரான அரச ஒடுக்குமுறையில் மனித உரிமைகளை காக்கும் அமைப்புக்கள் எனப்படுவனவற்றுக்கும் ஒடுக்கு முறையாளர்களுக்கும் இடையே இடம் பெறும் நெருக்கமான கொடுக்கல் வாங்கல்களும் ஐக்கியமும் மீண்டும் ஒரு தடவை அம்பலமாகியுள்ளது,

மார்ச் 23ம் திகதி நடைபெற்ற அமைச்சரவை பத்திரிகை மாநாட்டில் ''தொழிலாளர் பாதை'', ''கம்கறுமாவத்த'' பத்திரிகையாளர் நீதியமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிசிடம் தோட்டப்புறஇளைஞர்களை தடுத்து வைத்துள்ளது பற்றிய பிரச்சினையை எழுப்பினார். அது பற்றி தமக்கு எதுவும் தெரியாது எனவும் அடுத்த பத்திரிகையாளர் மாநாட்டில் தகவல்களை வெளியிடுவதாயும் கூறி, ஜீ. எல். பீரிஸ் அரசாங்கத்தின் கையைக் கழுவிக் கொள்ள முயன்றுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக பொதுஜன முன்னணிஅரசாங்கத்தின்-கீழ் இப்போது நடைமுறைக்கிடப்படும் கைதுசெய்தல் அரச வேட்டைகள் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் கையுமாக ஆரம்பித்தது. கடந்த அக்டோபரில் இருந்து இந்த வேட்டைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. கடந்த வாரத்தில் அட்டன் பகுதியில் பிரான்சிஸ், சவரிமுத்து, சுந்தரம், அருணாசலம், லோகேஸ்வரம் என்ற இளைஞர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதாக எமக்கு அறிக்கைகள் வந்துள்ளன.

### புலிகளுடன் தொடர்பு

''விடுதலைப் புலிகளுடன் தொடர்பு'' இருப்பதாகச் சந்தேகிக்கப்படுவதாலேயே இளைஞர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். இந்த 'தொடர்பு'தான் அவர்ளுக்குஎதிரான குற்றச்சாட்டு. டாக்டர் சாந்திகுமாரை கைதுசெய்ததற்கு காவலில் உள்ள ஏனைய இளைஞர்கள் தெரிவித்தவையே காரணமாகும் என ஆரம்பத்தில் பொலிசார் தெரிவித்தனர். காவலில் உள்ளவர்களிடம் தமக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்பு உள்ளதாகக் காட்டும் அறிக்கையைப் பெற பொலிசார் முயற்சிக்கின்றனர்.

அவ்வாறே டாக்டர் சாந்திகுமாரும் விடுதலைப் புலிகளுடன் நேரடித் தொடர்புகள் கொண்டிருந்ததாகக் குறிப்பிடும் அறிக்கைகளை பெற்றுக் கொள்ளப் பொலிசார் முயற்சிப்பதாக தெரியவந்துள்ளது. தோட்டப்பகுதியில் இத்தகைய கைதுசெய்தல்களுக்கு இலக்காகும் சகலரும் புகழ்பெற்ற 'பயங்கரவாததடைச் சட்டத்தின்' கீழேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் கட்டவிழ்க்கப்பட்டுள்ள இந்த அரச ஒடுக்குமுறை விடுதலைப் புலிகளுடன் இப்போது தாம் ஆரம்பித்துள்ள பேச்சுவார்த்தைகள் 'சமாதானம்' 'ஜனநாயகம்' நிலைநாட்டுவதற்காகும் என்ற மோசடியானதும் காலவதியானதுமான கதையளப்புக்களின் சுயகோலத்தைக்காட்டிக்கொண்டுள்ளது. மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையின் கீழ் விடுதலைப் புலிகள் வடக்கு-கிழக்கு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது என்பது பிரசித்தமானது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடாத்துகிறது. அரசாங்கத்தின் நிர்வாகத்துக்கு உட்பட்டதாகக் கூறப்படும் கிழக்கு மாகாணத்திலும் வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களும் ஆயுதபாணிகளாயும் நிராயுதபாணிகளாயும் உலாவுவதாயும் இராணுவ-பொலிஸ் படைகளுடன் ''நல்லிணக்க'' பேச்சுவார்த்தைகளில் தினமும் ஈடுபடுவதாகவும் தினமும் செய்திகள் வந்து கொண்டுள்ளன. இத்தகைய ஒரு நிலைமையினுள் விடுதலைப் புலிகளுடன் உறவு கொண்டுள்ளதாக 'சந்தேகிக்கப்படும்' தோட்ட இளைஞர்கள் சல்லடைபோட்டு தேடிக் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பொதுஜன முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி நிலைநாட்டப்போகும் சமாதானமும், ஜனநாயகமும் எத்தகையது என்பதை இதைக்கொண்டு புரிந்து கொள்ள முடியும்.

மேற்சொன்ன 'குற்றச் சாட்டை தோட்டத் தொழிலாளரின் தலையில் கட்டி அடிக்கும் கொடிய எதிர்ப்புரட்சித் திட்டத்தின் ஒருபாகமாக அரசாங்கமும் பொலிசும் தயார் செய்து வருகின்றது என் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் குற்றம் சாட்டுகின்றது.

### உரிமைகிடையாது

எவ்வாறெனினும் தமது அரசியல் அபிப்பிராயத்தின் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களையும் சரி ஏனைய தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களையும் சரி ஒடுக்கித்தள்ள பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கோ அல்லது முதலாளித்துவ அரசுக்கோ எந்தவிதமான உரிமையும் கிடையாது.

மேலும் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் மலையக மக்கள் முன்னணியும் சமசமாஜ – கம்யூனிஸ்ட் கட்சிகளும் அவற்றின் தொழிற்சங்கங்களும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினுள் அணிதிரண்டு கொண்டுள்ள மற்றும் தொழிற் சங்கங்களின் தலைவர்களும் தோட்டப் பகுதியில் கட்டவிழ்க்கப்பட்டுள்ள அரச ஒடுக்குமுறையின் நிஜ ஏஜன்டுகளாகச் செயற்படுகின்றனர் என பு. க. க. குற்றம் சாட்டுகின்றது.

இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் யூ.என்.பி. அரசாங்க அமைச்சர் என்ற முறையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான தாக்குதலை நடாத்த செயற்பட்டார். இப்போது அந்தப் பிற்போக்கு வேலைத் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் முகமாக அழைக்கப்பட்டுள்ள பொதுஜன முன்னணி அரசாங்கத்தில் அவர் சேர்ந்து கொண்டுள்ளார்.

அது மட்டுமா? தொண்டமானும் செல்லச்சாமியும் யூ.என்.பி. கையாட்களாக இருந்த வேளையில் பீ. சந்திரசேகரன் அதன் பங்காளியானார். தோட்டத் தொழிலாளர்களிடையே எதிர்ப்பு பரந்து வந்ததைத் தொடர்ந்து பீ. சந்திரசேகரன் தொண்டமான் – செல்லச்சாமி தலைமையின் எதிர்ப்பாளியாகத் தன்னைக் காட்டிக்கொண்டு மலையக மக்கள் முன்னணியை திணித்தார். நீண்டகாலம் செல்வதற்குள் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு பற்றிய குற்றச்சாட்டின்கீழ் கைது செய்யப்பட்ட சந்திரசேகரனும் அவரது சகபாடியான பீ.ஏ, காதரும் ஓராண்டுக்கும் மேலாக வழக்கு விசாரணை இல்லாமல் சிறைக் கூடுகளுள் தள்ளப்பட்டனர். இன்று சந்திரசேகரன் தொண்டமானுடன் சேர்ந்து ஒரே பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பிரதி அமைச்சர் ஆகியுள்ளார்.

### பொலிசுக்கு பேர்ப் பட்டியல்

இம்முறை இளைஞர்கள் கைதுசெய்யப்படுவதற்கு பொலிசுக்கு அவர் பேர்ப் பட்டியல் வழங்கி இருக்கலாம் எனத் தோட்டத் தொழிலாளர்கள் சந்தேகிக்கின்றார்கள். கைது செய்தல்கள் பற்றி தொழிலாளர்கள் சந்திரசேகரனிடம் முறையிட்டபோது அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாகத் குற்றஞ்சாட்டப்பட்டு இருப்பதால் தம்மால் எதுவும செய்ய முடியாது எனக் கூறி கைவிரித்துள்ளார்.

சமசமாஜ கட்சியினால் பிதற்றல் பேர்வழியாக களத்தில் இறக்கப்பட்டுள்ள வாசுதேவ நாணயக்காரவை கைது செய்தல் பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பும்படி கேட்கப்பட்டது. ஆனால் அவரோ டாக்டர் சாந்திகுமாரின் பெயரை தன்னும் குறிப்பிடாமல் கேள்வி எழுப்பிவிட்டுத் தலைமாறியுள்ளார். கிறிஸ்லஸ் பாம் தோட்டத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள முத்துவினாயகம் என்ற தொழிலாளி அங்கத்துவம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர்கள் மௌனம் சாதிப்பதாக அவரின் தாயார் தெரிவித்தார். இவர் ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த செங்கொடிச் சங்கத்தின் அங்கத்தவர். அவர் சம்பவம் பற்றி சங்கத் தலைவரான ஓ. ஏ. இராமையாவிடம் முறைப்பட்டபோதிலும் சட்டரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் கூட அவர் தவிர்த்துக் கொண்டுள்ளதாக குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்தனர். நவ சமசமாஜக் கட்சியும் அதன் தோட்டத் தொழிற் சங்கமும் மற்றும் சங்கங்களும் இன்று இடம்பெற்றுவரும் அரச ஒடுக்குமுறை பற்றி முழு மௌனம் சாதிக்கின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்பட்டுள்ள தாக்குதல் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் இலங்கையின் முழுத் தொழிலாளர் – ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக இன்று உக்கிரமாக்கப்பட்டு வரும் தாக்குதலின் ஒரு பாகமாகும். தனியார்மயமாக்கம், தொழில் அழிப்பு, வாழ்க்கைத் தரத்தினை மேலும் வெட்டிச் சரித்தல் இலவசக் கல்வி, இலவச சௌக்கிய சேவையைக் கொண்ட நலன்புரி சேவையைத் துடைத்துக்கட்டுவதோடு இராணுவ – பொலிஸ் சர்வாதிகாரத்தினை உறுதி செய்யும் திசையில் பொதுஜன முன்னணி அரசாங்கமும் இலங்கையின் முதலாளிகளும் இறங்கியுள்ளனர். அதன் இலக்கு ஏகாதிபத்திய கம்பனிகளினதும் அவற்றின் கைக்கூலி 'தேசிய' முதலாளிகளது காட்டுமிராண்டி காலனித்துவ சுரண்டலை உறுதி செய்வதேயாகும்.

மிகப் பிரமாண்டமான மக்கட் தொகையினரைக் கொண்ட தோட்டத் துறையை முழுமனே தனியார்மயமாக்குவது அரசாங்கத்தின் திட்டத்தில் முதலிடம் பிடித்துக் கொண்டுள்ளது. பங்குகளில் நூற்றுக்கு 10 வீதத்தினை பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகள் நிலங்களை கையேற்று தோட்டத் துறையை உருவாக்கியதால் ஏற்பட்ட அநீதிக்கு நஷ்டஈடு கொடுக்கும் விதத்தில் நாட்டின் சகல குடும்பங்களுக்கும் வழங்குவதாக அரசாங்கம் கூறியுள்ளது. இது தனியார் மயமாக்கத்தை எதிர்க்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக சிங்கள இனவாத ஆத்திரமூட்டல்களைத் தூண்டிவிடச்செய்யும் முழு பிற்போக்குத் திட்டமாகும்.

தேயிலை உற்பத்திக்காக செய்யும் உழைப்புச் செலவை நூற்றுக்கு 25 வீதத்தினால் குறைப்பதாலும் உற்பத்தியை இரண்டு மடங்கால் அதிகரிப்பதாலும் இலாபம் கறக்கும் நிலைமைகளை தனியார் கம்பனிகளுக்கு செய்து கொடுக்கும் பொறுப்பு அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நஷ்டம் அடையும் தோட்டங்கள் மூடப்படவுள்ளன. இதன் அர்த்தம் என்ன? இலட்சக் கணக்கான தொழிலாளர்களின் தொழில்களை நாசமாக்கி காட்டுமிராண்டி உழைப்புச் சுரண்டலை திணிக்கும் திட்டம் தயாராகி வருகின்றது.

(6ம் பக்கம் பார்க்க)

# சோவியத் யூனியனில் ஸ்டாலினிசத்துக்கு ஒரு

அமெரிக்காவிலான எனது விரிவுரைச் சுற்றுலா உலகம் பூராவும் பிரசித்தமான ஒரு பல்கலைக் கழகத்தில்—மிச்சிக்கன் மாநில பல்கலைக் கழகத்தில் ஆரம்பமாவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன் என்பதை முதலில் குறிப்பிட விரும்புகின்றேன். எல்லாவற்றுக்கும் மேலாக இந்த விரிவுரையை இன்று நிகழ்த்தும்படி அழைப்பு விடுத்த ரூஷ்ய, கிழக்கு ஐரோப்பிய ஆய்வு நிலையத்துக்கும் (Center for Russian and Eastern European Studies) பேராசிரியர் சீகல்போமுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இனி நான் எனது விரிவுரையின் தொனிப் பொருளுக்குச் செல்கின்றேன்.

ஒரு சில வருடங்களுக்கு முன்னர் ஒரு அமெரிக்க பத்திரிகையாளர் பின்வருமாறு குறிப்பிட்டார்: சோவியத் யூனியனில் எதிர்காலத்தை முன் அனுமானிக்க முடியாதது மட்டுமன்றி கடந்த காலத்தையும் கூட முன் அனுமானிக்க முடியாது. அவர் மனதில் கொண்டிருந்தது என்னவெனில் எமது வரலாறு தொடர்ந்து மீளவரையப்பட்டுள்ளதோடு வேறுபட்ட காலங்களில் சில வரலாற்று பிரமுகர்களும் நிகழ்வுகளும் முற்றிலும் வேறுபட்ட வெளிச்சத்தில் வைத்தே காட்டப்பட்டனர்

சோவியத் யூனியனில் தசாப்தங்களாகப் பரந்துபட்டு வந்த வரலாற்றுக் கட்டுக் கதைகளுள் இரண்டு அடிப்படை வடிவங்கள் காணப்பட்டன. முதலாவது, ஸ்டாலினிச பொய்மைப்படுத்தல் சிந்தனா பீடம் என அழைக்கப்பட முடியும். இரண்டாவது சிந்தனா பீடத்தை நாம் கம்யூனிச விரோத சிந்தனா பீடம் என அழைக்கலாம். ஸ்டாலினிஸ்டுகளாலும் கம்யூனிச விரோதிகளாலும் எமது வரலாற்று விளக்கங்கள் முன்வைக்கப்பட்ட போது பல இடங்களில் ஒத்திருந்தமை பெரிதும் அக்கறைக்குரியதாய் இருந்தது. உதாரணமாக, ஸ்டாலின் லெனினின் நலனுக்கான இயற்கையான தொடர்ச்சியாகும் என்ற ஒரு மையக்கோட்பாட்டில் அவர்கள் உடன்பாடு கண்டனர், அவர்கள் முன்னர் ஸ்டாலின் ஒரு நல்ல நலனுக்கான லெனினின் நலனுக்கான ஒரு நல்ல தொடர்ச்சியாகும் எனக் கூறியபோது ஒரு சிறிய வேறுபாடு இருந்தது. இன்று அவர்கள் அதற்கு மாறாக கெட்ட லெனினின் கெட்ட கொள்கையை தட்டிப் பறித்துக் கொண்டவர் ஸ்டாலின் என்கிறார்கள்.

## பேராசிரியர் றொகோவினின் அமெரிக்க விரிவுரை சுற்றுலா

முன்னைய சோவியத் யூனியனின் தலைசிறந்த மார்க்சிச வரலாற்றாசிரியரான பேராசிரியர் வடிம் சகாரோவிச் றொகோவின் மார்ச் 7ம் திகதி அமெரிக்க மிக்சிக்கன் மாநிலப் பல்கலைக் கழகத்தில் ‘‘சோவியத் யூனியனில் ஸ்டாலினிசத்துக்கு ஒரு மாற்றீடு இருந்ததா?’’ என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்தினார். அன்றைய தினம் விரிவுரை மண்டபம் 220 விரிவுரையாளர்கள், மாணவர்கள் என்போரால் நிரம்பி வழிந்தது.

57 வயதான பேராசிரியர் தத்துவ விஞ்ஞானத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றதோடு மாஸ்கோவில் உள்ள ரூஷ்ய சமூகவியல் விஞ்ஞான கழகத்தின் ஒரு முன்னணி ஆராய்ச்சியாளர். ஸ்டாலினிச அதிகாரத்துவ ஆட்சிக்கு எதிரான வரலாறு பற்றி ஒரு ஆறு தொகுதி வரலாற்று நூலை எழுத ஆரம்பித்துள்ள றொகோவின் ஏற்கனவே மூன்று தொகுதிகளை எழுதி முடித்துவிட்டார். அமெரிக்க மாணவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் சோவியத் யூனியனின் வரலாற்றினை தமது விரிவுரையில் தெளிவுபடுத்திய பேராசிரியர் றொகோவின் ‘‘சோசலிசம் செத்துவிட்டது’’ என்ற இன்றைய பிரச்சார இயக்கத்துக்கு பலத்த அடிகொடுத்துள்ளார், அத்தோடு இன்று மேற்கத்திய நாடுகளில் நடைமுறையில் உள்ள உத்தியோகபூர்வமான சோவியத் இயலுக்கும் இவ்விரிவுரை தலையடி கொடுத்துள்ளது.



விரிவுரை சுற்றுலாவின் பொருட்டு அமெரிக்கா வந்து சேர்ந்த பேராசிரியர் றொகோவினை அமெரிக்க வேர்க்கர்ஸ் லீக்கின் துணைச் செயலாளர் ஹெலன் ஹெல்யாட் வரவேற்கின்றார்.

ஸ்டாலினிஸ்டுகள், கம்யூனிஸ்ட் விரோத பிரச்சாரகர்கள் இரு தரப்பாலும் ஊர்ஜிதம் செய்யப்பட்ட சில ஆய்வுகள் உள்ளன. முதலாவது, போல்ஷிவிக் கட்சி எப்போதும் ஒரு கற்பாறை சிற்பக் கட்சியாக இருந்தது எனவும் கட்சியினுள் தலைதூக்கிய நிகழ்வுகள் சம்பந்தமாக பாரதூரமான கருத்து வேறுபாடுகளோ அல்லது எதிர்ப்போ அதனுள் கிடையாது என்பதாகும். இரண்டாவது, ஸ்டாலினிசம் அக்டோபர் புரட்சியினதும் போல்ஷிவிசத்தினதும் தர்க்கரீதியான விளைவு அல்லது தொடர்ச்சியாக விளங்கிற்று என்பது மிகவும் அடிப்படையான ஆய்வாகும். அடுத்த ஆய்வு, ஸ்டாலினிஸ்டுகளின் அடக்கு முறைக் கரங்களுக்குப் பலியானவர்கள் எவருமே எந்தவொரு குற்றத்துக்கும்—ஸ்டாலினிச எதிர்ப்பு உட்பட குற்றவாளிகள் அல்லர் என்கின்றது. அத்தகைய வரலாற்றுக் கட்டுக்கதைகளை முன்வைப்போர் மக்களின் சிந்தனைக்கு விண்ணப்பிக்காது அவர்களின் மனக் கிளர்ச்சிகளுக்கே விண்ணப்பிக்கின்றார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் அவர்கள் விண்ணப்பிப்பது உண்மைக்கு அன்றி பொது ஜன அபிப்பிராயத்துக்கு அல்லது அவர்களின் சொந்த அபிப்பிராயங்களுக்கே.

## அபிப்பராயம் எதிர் வரலாற்று உண்மை

ஒருவர் வரலாற்றை அணுகும்போது உண்மைக்கும அபிப்பராயத்துக்கும் இடையே இருக்கவேண்டிய உறவு பற்றிய பிரச்சினையை இங்கு நாம் தொட்டாகவேண்டும். மேற்கில் அடிக்கடி பின்வரும் நிலைப்பாடு முன்வைக்கப்பட்டது. நீங்கள் லெனின், ஸ்டாலின், ட்ரொட்ஸ்கி, மற்றும் பேர்வழிகளை ஒரு சில வழிகளில் மதிப்பீடு செய்ய ஏனையோர் பிரச்சினையை முற்றிலும் வேறுபட்ட வழியில் முன்வைக்கலாம் எனக் கூறப்பட்டது. ஆனால் இதனை ஒரு வழியில் முன்வைப்பது அவர்களின் உரிமையாகும். இதனை மற்றொரு வழியில் முன்வைப்பது மற்றையோரின் உரிமையாகும். உண்மையில் உண்மை எப்போதும் கலந்துரையாடல் விவாதங்களின் போதே தோன்றுகின்றது. ஆனால் நீங்கள் அந்த நிலைப்பாட்டை முழுமையாக்கிக் கொள்ளின் ஒரு விஞ்ஞானம் என்ற முறையில் வரலாற்றின் அபிவிருத்தியை பற்றி எந்தவொரு விதத்திலும் பேச முடியாது.

அபிப்பராயமானது நாளாந்த அறிவின் அல்லது பொது அறிவின் ஒரு பாகமாகும். அபிப்பராயம் இடம்பெறும் நிகழ்வுகளை அல்லது பொருட்களைக் குறிக்கிறது, அவை இல்லாமல் நாம் பெரிதும் விஞ்ஞான பூர்வமான முடிவுகளை எடுப்பதற்கு வேண்டிய பூரண அறிவையோ அல்லது போதிய அறிவையோ கொண்டிருக்க முடியாது. எவ்வாறெனினும் உண்மையானது ஒரு விஞ்ஞானபூர்வமான பாகமாகும். அது இந்த தோற்றப்பாட்டினை வெகு ஆழமாக ஆய்வு செய்வதன் மூலம்—உண்மைகளையும் நிகழ்வுகளையும் விடாமுயற்சியுடனும் புறநிலைரீதியிலும் ஆய்வு செய்வதன் பெறுபேறாக தோன்றுகின்றது.

எதிர்காலத்தைப் பற்றி ஒருவர் கலந்துரையாடுகையில் சமுதாயத்தில் பொதுஜன அபிப்பிராயம் ஒரு பெரும் பாத்திரம் வகிப்பது உண்மையே. இந்த எதிர்காலம் சாத்தியமான பல மாறுபாடுகளை தருவது உண்மை தான். நாம் இவற்றில் எவையும் முழுமனே வெளிப்பாடாகும்; நிஜமாக இடம்பெறும்; யதார்த்தமாகும் எனக் கூற முடியாது. ஆதலால் எதிர்காலத்தைப்பற்றி நாம் பேசும் போது நாம் தவிர்க்க முடியாத விதத்தில் பலதரப்பட்ட அபிப்பிராயங்களை எதிர்க்க வேண்டியுள்ளது.

பொதுஜன அபிப்பராயம் கூட ஒருவர் இன்றைய நிலைமையைப் பற்றிக் கலந்துரையாடும்போது ஒரு பெரும் பாத்திரம் வகிக்கின்றது. ஏனெனில் ஒன்று நடைபெற்றுக்கொண்டுள்ள போது நாம் இன்னமும் அதைப்பற்றி ஒரு பூரண தகவலைக் கொண்டிராததும் அதனை மதிப்பீடு செய்வதற்கான முழுப் பூரணமான மதிப்பீட்டு அளவீடுகளை கொண்டிராததுமே காரணம்.

ஆனால் ஒருவர் கடந்த காலத்தைப் பற்றிப் பேசும் போது அபிப்பராயத்தின் பாத்திரம் பெருமளவில் குறைந்துபோகின்றது. எனது அபிப்பராயப்படி அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தில் தெற்குத்தான் வென்றது எனக் கூற எவரும் துணிய மாட்டார்கள். உண்மையில் இந்த அடிப்படைக் கொள்கை கூட மிகவும் பரந்த வரலாற்று உண்மைகளுடன் தொடர்புபட்டது. அவை வரலாற்று உண்மைகளின் ஒரு விரிந்துபட்ட சேகரிப்புக்களையும் ஆய்வுகளையும் அடிப்படையாகக் கொண்டவை,

ஆதலால் வரலாற்றுக் கட்டுக்கதைகளும் பொய்மைப் படுத்தல்களும் போதிய வரலாற்று உண்மைகளின் பற்றாக்குறையினால் மட்டும் தோன்றுவதில்லை. மாறாக அவை அரசியல் நோக்கங்களால் தூண்டப்பட்டு சில வரலாற்று உண்மைகளை வேண்டுமென்றே இருட்டடிப்புச் செய்வதால் பெரிதும் ஏற்பட்டவை. அத்தோடு அதே அரசியல், உள்நோக்கங்கள் காரணமாக சில உண்மைகள் வேண்டுமென்றே முதன்மைப் படுத்திக் காட்டப்பட்டுள்ளன. அத்தோடு சில வேளைகளில் வரலாற்று உண்மைகளை நேரடியாகவும் வெளிப்படையாகவும் பொய்மைப் படுத்தப்பட்டு அல்லது திரிக்கப்பட்டுள்ளன.

## லிங்கன் இல்லாத அமெரிக்க வரலாறு?

ஸ்டாலினின்கீழ் அக்டோபர் புரட்சியின் வரலாற்றில் செய்யப்பட்ட திரிப்புக்கள், பொய்மைப்படுத்தல்களின் பரிமாணத்தைக்காட்ட நான் பின்வருவதை சுட்டிக்காட்டுகின்றேன்: அமெரிக்க ஐக்கிய அரசுகளை உள்ளடக்கிய பெரும் யுத்தங்களைப் பற்றிய ஒரு வரலாற்றுக் குறிப்பில் வாஷிங்டனதும் லிங்கனதும் பாத்திரங்கள் பூரணமாக புறக்கணிக்கப்பட்டு, மூடி மறைக்கப்பட்டு, அடியோடு குறிப்பிடப்படாது விடப்படின் நீங்கள் என்ன நினைப்பீர்கள்? அல்லது அது வாஷிங்டனும் லிங்கனும் பிரித்தானிய உளவாழிகள், நாசகாரர்கள் அல்லது இந்த வழியிலானவர்களாய் இருந்தார்கள் எனச் சொன்னால்?

ஆனால் சோவியத் யூனியனில் இடம்பெற்றது இதுவே. கிட்டத்தட்ட 1987க்கு முன்னதாகப் பிரசுரிக்கப்பட்ட சகல சோவியத் கலைக்களஞ்சியங்களையும் (Soviet Encyclopedias) எடுத்துப் பார்ப்பின் நீங்கள் ஹிட்லர், ஹிம்லர், கோயபெல்ஸ், கோயரிங் மற்றும் ஏனையோர் பற்றி குறிப்பிடும் பதிவுகள் இருப்பதைக் காண்பீர்கள், ஆனால் ட்ரொட்ஸ்கி, புகாரின், றிக்கோவ், சினோவியேவ், கமனேவ் இன்னும் பெரும் தொகையான அக்டோபர் புரட்சியின் முன்னணிப் புள்ளிகளுக்கென ஒரு பதிவையும் நீங்கள் காணமாட்டீர்கள்.

ஆனால் இந்த சர்வாதிகாரத் தோற்றப்பாட்டுக்கு இதைவிட ஆழமான பக்கமுட உண்டு ஸ்டாலினின் ஆட்சியின் கீழ் 1920பதுகளில் அரச பதிப்பகத்தினால் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்ட ட்ரொட்ஸ்கியின் ஒரு புத்தகத்தினை நீங்கள் வீட்டில் வைத்திருந்தால்; நீங்கள் ட்ரொட்ஸ்கியை—‘‘ட்ரொட்ஸ்கி ஒரு மாபெரும் மேடைப் பேச்சாளர் அல்லது பேச்சாளராய்’’ இருந்தார் அல்லது ‘‘அவர் உள்நாட்டு யுத்தத்தில் ஒரு முக்கிய பாத்திரம் வகித்தார்’’ என்று குறிப்பாக புகழ்ந்து தள்ளாது நீங்கள் சும்மா ஒரு பக்கச் சார்பற்ற வசனத்தை உதிர்த்தால் அவ உடனடி பதில் தாக்குதலுக்கு ஆளாவார். இது சுட்டு தள்ளுகின்ற அல்லது ஒரு சித்திரவதை முகாமுக்கு அனுப்பப்படுகின்ற வடிவத்தை எடுக்க முடியும்,

ஸ்டாலினின் மரணத்தின் பின்னர் நிலைமை கணிசமான அளவு மாற்றம் கண்டது உண்மையே. ஸ்டாலினின் மரணத்தின் பின்னர் நீங்கள் அத்தகைய அறிக்கைகளை விட்டால் கட்டாயம் ஒரு சிறைச்சாலைக்கு அல்லது சித்திரவதை முகாமுக்கு நீங்கள் அனுப்பப்பட்டே ஆக வேண்டும் என்பது ஒரு விதியாக இருக்கவில்லை. ஆனால் நாம் சொல்வோம் நா

# மாற்றீடு இருந்ததா?

இங்கு ஆற்றுவது போன்ற ஒரு விரிவுரையின்போது நீங்கள் அத்தகைய கருத்தை வெளியிட்டால் நீங்கள் கட்டாயம் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து – நீங்கள் ஒரு அங்கத்தவராய் இருந்தால் – வெளியேற்றப்படுவதோடு பல்கலைக்கழகத்தில் உங்கள் பதவியில் இருந்தும் விலக்கப்படுவீர்கள் அல்லது நீங்கள் உங்கள் பதவியை இழப்பீர்கள்.

## மேற்கத்தைய சோவியத்தியலின் பொய்மைப்படுத்தல்

இது சம்பந்தமாக பல மேற்கத்தைய வரலாற்றாசிரியர்களின் கருத்துக்களை ஆய்வு செய்வது அக்கறைக்குரியது. உதாரணமாக சோவியத் யூனியனின் மாபெரும் பயங்கரம் பற்றி செலவிடப்பட்ட மிகவும் அடிப்படையான ஆய்வுகளை றொபேட் கொன்குவஸ்ட் எழுதினார் என்பதை நீங்கள் நிச்சயம் அறிந்திருப்பீர்கள், 1937 – 38ன் மாபெரும் பயங்கரக் காலப்பகுதியிலான சகல அட்டூழியங்களும் ட்றொட்ஸ்கிசத்துக்கு எதிரான ஒரு ஈவிரக்கமற்ற போராட்டம் என்ற பதாகையின் கீழேயே இடம்பெற்றது என்பதை நாம் நிச்சயம் நினைவில் கொண்டாக வேண்டும், இது இப்படியாயின் - மாபெரும் பயங்கரம் பற்றி நீங்கள் விரிவாக கலந்துரையாடின் நீங்கள் ட்றொட்ஸ்கியைப் பற்றிய நிலைமையை மட்டுமன்றி சோவியத் யூனியனுள் இருந்த அவரின் நெருங்கிய ஆதரவாளர்களின் நிலைமையைப் பற்றியும் ஒரு மிகவும் விரிவான ஆய்வையும் முன்வைக்க வேண்டும் என ஒருவர் நினைக்கலாம்.

ஆனால் கொங்குவஸ்டின் நூலில் ட்றொட்ஸ்கிக்கென- அவரின் கருத்துக்களும் அவரின் நடவடிக்கைகளும் - ஏறக்குறைய இரண்டு பக்கங்கள் செலவிடப்பட்டிருப்பதையே காண்பீர்கள். கொங்குவஸ்ட் நூலின் இந்த இரண்டு பக்கங்களில் நான் 10க்கும் குறையாத தவறான நிலைப்பாடுகளைச் சந்தித்தேன். அவை வரலாற்று உண்மைகளுடன் ஆழமாக மோதிக் கொள்கின்றன.

பெரெஸ்ரொயிக்காவின் தொடக்கத்தில் சோவியத் வரலாற்றிலான இந்தப் பல விடயங்கள் மீதான தடைகள் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து நான் ஸ்டாலினிசம் பற்றிய ஒரு ஆழமானதும் நிஜமானதுமான ஆய்வுக்கான வழி திறக்கும் என நேர்மையாய் உணர்ந்தேன்; எதிர்பார்த்தும் இருந்தேன். உண்மையில் அந்தக் கஷ்டமான வருடங்களின் நினைவுகள் ஒவ்வொரு சோவியத் பிரஜையினதும் இருதயத்துக்கு மிகவும் நெருக்கமானவை.

சோவியத் பத்திரிகைகளில் பல்வேறுபட்ட குற்றங்கள் பற்றிய முதல் விபரங்கள் வெளியாகத் தொடங்கியதும் அவை சோவியத் யூனியனின் ஒரு பரந்த வாசகர்களிடையே ஒரு பிரமாண்டமான அக்கறையைத் தூண்டிவிட்டது எனக் கூறியாக வேண்டும்.

பல சஞ்சிகைகளதும் புதினப் பத்திரிகைகளதும் பக்கங்களில் புனைகதைகள், நாவல்கள், சிறுகதைகள் முதலிய படைப்புக்கள் மட்டுமன்றி பற்பல வருடங்களாக மறைத்துவைக்கப்பட்டு இருந்தவையும் இந்த வரலாற்றைக் கலந்துரையாடியவையுமான வரலாற்றுப் பத்திரங்களும் வாழ்க்கை வரலாறுகளும் கூட வெளிப்பட்டன. ஒன்று அல்லது இரண்டு வருடகால இடைவெளியில் சோவியத் யூனியனில் பெரும் சஞ்சிகைகளினதும் பத்திரிகைகளதும் விற்பனை நான்கு ஐந்து மடங்கால் அதிகரித்ததோடு மாதத்துக்கு இரண்டு அல்லது மூன்று மில்லியன் பிரதிகளை உள்ளடக்கியிருந்ததோடு தினசரி வார பத்திரிகைகள் மில்லியன் கணக்கில் விற்பனையாகியது ஏன் என்பதை இந்த அக்கறை விளக்குகின்றது.

எவ்வாறெனினும் பெரெஸ்ரொயிகா காலப்பகுதியில் வரலாற்று விளக்கத்தின் திசை கணிசமான அளவு மாற்றம் அடைந்துள்ளது என நாம் குறிப்பிட்டாக வேண்டும். வெறுமனே ஸ்டாலினிசத்தை விமர்சனம் செய்வதற்கு அப்பால் ஒரு போக்குத் தலைநீட்டத் தொடங்கியதோடு அது ஸ்டாலினிசத்துக்கும் அப்பால் சென்று போல்ஷிவிசம், லெனினிசம், மார்க்சிசம் முழுவதையும் தாக்கியது. அத்தகைய கேள்விகளை எழுப்பும் சகல பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும போல்ஷிவிக கட்சியின உள்ளே ஸ்டாலினிசத்துக்கான எந்த விதமான கம்யூனிஸ்ட் எதிர்ப்பையும் முழுயனே புறக்கணித்தனர் எனச் சொல்லவேண்டும். கலந்துரையாடப்பட்ட விரல்விட்டு எண்ணக்கூடிய கட்டுரைகள் — உதாரணமாக- இடதுசாரி எதிர்ப்பின் பாத்திரம், ஸ்டாலினிசத்துக்கான மார்க்சிச, ட்றொட்ஸ்கிஸ்ட் எதிர்க்கட்சியின் பாத்திரம் என்பன வெறும் அப்பட்டமான கம்யூனிச விரோத வெளியீடுகளின் அலையினால் அடியுண்டு போயிற்று.

## வொல்கோனோவ் சோவியத் வரலாற்றை மீள வரைந்தது எப்படி?

சோவியத் வரலாற்றியலின் ஒரு முற்றிலும் புதிய பதிப்பு இருந்தது. அது எழுத்தாளர் டிமிதரி வொல்கோனோவினால் எழுதப்பட்ட மூவரியலை (Trilogy) முனைப்படுத்தி இருந்தது என நாம் கூற முடியும். இந்த மூவரியலின் தலைப்பு - ருஷ்ய புரட்சியின் தலைவர்களைக் குறிக்கும் விதத்தில் - வொஷ்டி Vozhdi). இது ''தலைவர்களை'' கருதுகின்றது. இந்நூல் பின்வரும் ஒழுங்கில் காணப்பட்டது; முதலில் ஸ்டாலின் பற்றியும் இரண்டாவதாக ட்றொட்ஸ்கி பற்றியும் மூன்றாவதாக லெனின் பற்றியும் குறிப்பிட்டது.

வொல் கோனோவ் யார்? இவர் கிட்டத்தட்ட பெரெஸ்றொய்காவுக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர் மிகவும் உயர் பதவி வகித்தவர். அவர் பெரிதும் சோடைபோன படைப்புக்களை செய்தவர். அவற்றை வாசிப்பது பெரும் கஷ்டம். ஆதலால் எவரும் அவற்றை வாசித்ததில்லை. அவர் ஆளும் பிரமுகர்களின் — பிரஷ்னேவின் கீழ் மட்டுமன்றி கொர்பச்சேவையும் அவரைத்தொடர்ந்து யெல்ட்சினின் கீழும் — நம்பிக்கையை அந்தளவுக்குக் கொண்டிருந்ததால் வழக்கமாக மூடப்பட்டுக் கிடந்த சுவடிகள் காப்பகத்தின் கதவுகள் அவருக்கு மட்டுமே திறந்தன. அவர் தமது முதல் படைப்பை — ஒன்று ஸ்டாலினைப் பற்றியது — வழக்கமாக தெரிந்திராத மூலம்களில் இருந்து மேற்கோள் காட்டி நிரப்ப முடிந்தது. இது பிரமாண்டமான அக்கறையைத் தூண்டிவிட்டது.

ஸ்டாலினைப் பற்றிய வொல்கோனோவின் நூல் 1988–89ல் வெளியாகியது. இதில்அவர் லெனினைப் பற்றியும் பொதுவில் போல்ஷிவிசம் பற்றியும் மாபெரும் மதிப்புடனும் அன்புடனும் எழுதினார். ஆனால் முன்னைய ஸ்டாலினிச எதிர்ப்பு எதிர்க்கட்சி தொடர்பாக அவர் பெருமளவுக்கு ஸ்டாலினிச, குருச்சேவ்வாத அணுகுமுறையை கடைப்பிடித்தார்.

எவ்வாறெனினும் ஸ்டாலினைப் பற்றிய முதலாவது நூலுக்கும் லெனினைப் பற்றிய மூன்றாவது திரட்டுக்கும் இடையே இரண்டு அடி சக அடையாளம் பின்னடிப்புசய அடையாளத்தினுள் இடம் பெற்றது.

மேற்கில் ட்றொட்ஸ்கியைப் பற்றிய பல சண்டிப்பானதும் புறநிலையானதுமான நூல்கள் ஏற்கனவே வெளிவந்திருந்ததை வொல்கோனோவ் நன்கு அறிந்திருந்ததால் அவர் சிறையுண்டு போனார். ட்றொட்ஸ்கியைப் பற்றிஆயும் அவரின் இரண்டாவது நூல் பல பெரிதும் புறநிலையான பக்கங்களைக் கொண்டுள்ளது எனக் கூறவேண்டும், எவ்வாறெனினும் போல்ஷிவிசம், லெனினிசம், அக்டோபர் புரட்சியின் பேரிலான அவரின் மனப்பாங்கு ஒரு 180 பாகை திருப்பம் எடுக்கத் தொடங்கியது. இன்று அவர் கடந்த 40 ஆண்டுகளாகத் தாம் எழுதி வந்த வற்றுடன் முற்றிலும் முரண்பட்டுக் கொள்ளும் உணர்வுடன் எழுதிக்கொண்டுள்ளார். அத்தோடு எதிர்வரும் ஒரு சில வருடங்களில் அவரின் புதிய நிலைப்பாடு மேலும் மாற்றம் அடையும்.

அப்போது அவர் மிகவும் தொடக்கத்தில் இருந்து சோசலிச, கம்யூனிஸ்ட் கருத்துக்கள் முற்றிலும் மனக்கோட்டையாய் இருந்தன எனவும், நடைமுறையில்அவற்றின் யதார்த்தம் ஒரு இரத்தக் களரிக்கேயன்றி வேறெதற்கும் இட்டுச் சென்றிராது எனவும், ஆரம்பத்தில் இருந்தே போல்ஷிவிசம் மாபெரும் பயங்கரத்தின் விதைகளைக் கொண்டிருந்தது எனவும் எழுதுவார். இப்போது வொல்கானோவ் போல்ஷிவிசம் சகல எதிர்ப்புக்களையும் வன்முறையில் ஒடுக்கித்தள்ள இட்டுச் சென்றது என வாதிட்டுக் கொண்டுள்ளார்.

## ஸ்டாலினின் பயங்கரத்தை உள்நாட்டுப் போருடன் சமப்படுத்தல்

வொல்கானோவின் நூல்களும் அவற்றையொத்த ஏனையவையும் பின்வரும் சிந்தனையை உள்ளடக்கி உள்ளன: ''1936 - 38ன் மாபெரும் பயங்கரமும், மாபெரும் அழித்தொழிப்புக்களும் ருஷ்ய உள்நாட்டு யுத்தத்தின் தர்க்கரீதியான தொடர்ச்சி. இவ்விரு காலப் பகுதிகளும் ஒரே எதிர்மறையான மனோபாவத்துடனேயே கையாளப்பட்டுள்ளன,

1917 புரட்சியைத் தொடர்ந்து வந்த ருஷ்ய உள்நாட்டு யுத்தம் எந்தவொரு கொள்கை சார்ந்த வழியிலும் வரலாற்றில் ஒரு புதிய தோற்றப்பாடு அன்று. ட்றொட்ஸ்கி அமெரிக்கன் உள்நாட்டு யுத்தத்துக்கும் ருஷ்ய உள்நாட்டு யுத்தத்துக்கும் இடையே பெரிதும் பொதுமைப்பாடுகளைக் கண்டார். இந்த விடயத்தைப்பற்றி அவர் ஒரு நூல்கூட எழுத விரும்பினார். ஆனால் அவரால் அதைச் செய்ய முடியாது போய்விட்டது. அதற்கிடையே அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தில் இறந்த சனத்தொகையின் வீதாசாரம் ருஷ்ய உள்நாட்டு யுத்தத்தில் இறந்த சனத்தொகையின் வீதாசாரத்தை விட அதிகம்.

மறுபுறத்தில் 1937ன் மாபெரும் பயங்கரமும், மாபெரும் அழித்தொழிப்புக்களும் உலக வரலாற்றில் எந்த விதமான முன்னோடியையும் கொண்டிருக்கவில்லை. இது நிராயுதபாணிகளான மக்களுக்கு எதிரான இரக்கமற்ற பதிலடியாக இருந்தது. இவர்கள் முற்றிலும் அப்பாவிகள். இவர்கள் ஜீ. பீ. யூ, என். கே. வீ. டி. இரகசியப் பொலிசாரின் சித்திரவதைக் கூடங்களில் செத்து ஒழிந்தனர். அங்குமத்தியகால விசாரணைகளின பின்னர் கண்டிராத சித்திரவதை முறைகளைப் பாவித்து பொய் ஒப்புதல் வாக்குமூலங்கள் கறக்கப்பட்டன.

கிட்டத்தட்ட 20 இலட்சம் மக்கள் இந்த மாபெரும் பயங்கரத்துக்குப் பலியானார்கள். அந்த 20 இலட்சம் பேரில் சுமார் 40 வீதத்தினர், இந்தக் காலப்பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டனர். எஞ்சிய வீதத்தில் பெருந்தொகையினர் சித்திரவதை முகாம்களில் மாண்டனர். நீங்கள் இவற்றைப் பற்றி சொலஸ்னிஸ்டினினதும் ஏனைய எழுத்தாளர்களதும் நூல்களில் நிறைய வாசித்திருப்பீர்கள் என்பதில் சந்தேகம் இல்லை,

## வரலாற்று ஏட்டை சரிசெய்தல்

பொய்மைப்படுத்தலுக்கு புது இரத்தம் பாய்ச்சப்படுவதைக் கண்ட நான் எமது நாட்டைப் பற்றி மட்டுமன்றி அனைத்துலக கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பற்றி ஒரு வரலாறு எழுத வேண்டும் என்ற முடிவுக்கு நான் வந்தேன். ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியினுள்ளும் கம்யூனிஸ்ட் அகிலம் பூராவும் இது திசைதிருப்பப்பட்டதால் ஸ்டாலினிசத்துக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சிகளின் உள்ளேயான உட்கட்சிப் போராட்டங்களுக்கு வெளிச்சம் பாய்ச்ச நான் தீர்மானித்தேன்.

இது ஒரு மிகவும் சிக்கலான கருத்துப்பாடாக உள்ளதால் ''ஒரு மாற்றீடு இருந்ததா?'' என்ற ஒரு பொதுத் தலைப் பின்கீழ் இந்த வரலாற்றைப் பற்றி நான் ஆறு புத்தகங்கள் எழுதவேண்டும் எனத் தீர்மானித்தேன்,

எனது எண்ணத்தில் அரைவாசி நிறைவேறியது. இத்தொடரில் முதல் மூன்று தொகுதிகளையும் எழுத என்னால் முடிந்தது. முதல் தொகுதி கட்சியின் உள்ளேயான சட்டரீதியான எதிர்க்கட்சிக்கென செலவிடப்பட்டது. இது கிட்டத்தட்ட 1922 தொடக்கம் 1927 இறுதி வரையிலான பகிரங்க கலந்துரையாடலில் இடம்பெற்றது.

இரண்டாவது தொகுதி சோவியத் யூனியனில் பிரமாண்டமான பொருளாதார பிரச்சினைகளின் ஒரு காலப் பகுதியான கட்டாய கூட்டுப் பண்ணைக் காலப்பகுதியான 1928 — 33க்கெனச் செலவிடப்பட்டது. இந்தக் காலப் பகுதியில் ஸ்டாலினிசத்துக்கு எதிரான எதிர்ப்பு பகிரங்கமான வழிகளில் இடம்பெற முடியாது இருந்தது ஆட்சியாளர்களால் இது தடைசெய்யப்பட்டிருந்ததே காரணம். இக் காலப்பகுதியின் கடைப் பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியின் உள்ளே பல்வேறு எதிர்ப்பு கோஷ்டிகள் ஒன்றிணைவது இடம்பெற்றது.

மூன்றாவது தொகுதி 1934 — 36 வரையான காலப் பகுதிக்கென செலவிடப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியினை ஒருவர் ஸ்டாலினிசம் துலாம்பரமாகும் காலப்பகுதி என அழைக்கலாம். இக்காலப் பகுதி முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்பொழுது சார்புரீதியில் தாராண்மைமயத்தினை கண்டது. ஆனால் ஏற்கனவே அரசியல் விளைவுகள் ஆழமாகிக்கொண்டு வந்திருந்தன. அதனை நான இனி விளக்கத் தொடங்குவேன்.

அடுத்த தொகுதிகள் மாபெரும் பயங்கரத்தின் வருடமான 1937ன் நிகழ்வுகளுக்கெனச் செலவிடப்படும். அத்தோடு பயங்கரத்தினைப் பற்றிய புதிய கருத்துப்பாடுகளை முன்வைக்கும். இத் தொகுதிகள் 1940ல் ட்றொட்ஸ்கி படுகொலை செய்யப்பட்டது உள்ளடங்கலானது வரை விரிந்து செல்லும்.

(அடுத்த இதழில் நிறைவு பெறும்)

# பல்கலைக் கழகக் கல்வியை வெட்டித் தள்ளும் ‘வெட்டுப்புள்ளி’ திணிப்புக்கு மாணவர் எதிர்ப்பு

1994/95 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதியில் ‘‘வெட்டுப் புள்ளி’’யின் அடிப்படையில் இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தம் மீது திணித்துள்ள அநீதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் ‘‘பல்கலைக் கழகங்களில் ஒவ்வொரு பாடநெறிக்கும் உள்ள வெற்றிடங்களின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும்படியும்’’ கோரும் ‘‘பாதிக்கப்பட்ட மாணவர்கள்’’ (யாழ்ப்பாண மாவட்டம்) தூதுக் குழு ஒன்று கொழும்பு வந்துள்ளது.

8 மாணவர் பிரதிநிதிகளைக் கொண்ட இத்தூதுக் குழு கொழும்பு புறப்பட முன்னர் 10,000 க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்களின் ஆதரவுடன் ஒரு எதிர்ப்புக் கூட்டத்தினையும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும் யாழ்ப்பாணத்தில் நடாத்தியது.

மாணவர் தூதுக் குழு தலைநகர் வந்து ஒரு கிழமை கடந்துவிட்டபோதிலும் அவர்களின் பெரும் முயற்சிகளுக்கு மத்தியிலும் — ஜனாதிபதி, கல்வி அமைச்சர், பல்கலைக் கழக மானிய ஆணைக் குழு தலைவர் ஆகியோரை சந்திப்பதில் இன்னமும் வெற்றி பெறவில்லை.

இம் மாணவர் பிரதிநிதிகள் தமக்கு எதிரான அநீதிகளை எடுத்து விளக்கும் பொருட்டு மார்ச் மாத நடுப்பகுதியில் வெள்ளவத்தையில் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டை நடாத்தினர். ஒரு யுத்தப் பிராந்தியத்தில் கல்விக்கான அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டுள்ள தாம் பல்கலைக் கழக அனுமதிக்கான ‘‘வெட்டுப் புள்ளி’’ விவகாரத்தில் கொழும்பு மாவட்டத்துடன் ஒப்பீட்டு அடிப்படையில் நோக்கப்பட்டுள்ளதை அவர்கள் வன்மையாகக் கண்டனம் செய்தனர்.

இந்தப் ‘‘பாதிக்கப்பட்ட மாணவர்கள்’’ 1990 ஜூனில் ஆரம்பமான இரண்டாவது இனவாத ஈழம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் ‘‘பாதிக்கப்பட்ட மாணவர்களின்’’ மகஜர் இவை பற்றிக் குறிப்பிடுவதாவது: ‘‘யுத்த காலத்தில் யாழ் மாவட்ட மாணவர்கள் அனுபவித்த கஷ்ட நஷ்டங்கள் அளப்பரியன. 1990 டிசம்பருக்கான க.பொ.த. (சா.த) பரீட்சை யாழ்ப்பாண மாவட்டத்தில் உரிய காலத்தில் நடைபெறவில்லை. இப் பரீட்சை ஓராண்டு ஒத்திப்போடப்பட்டது. இதனால் க.பொ.த. (உ.த) பரீட்சைக்கு எம்மை தயார் செய்ய எமக்கு கிடைத்ததோ ஒன்றரை ஆண்டுகள் மட்டுமே. ஆனால் ஏனைய மாவட்ட மாணவர்களுக்கு முழு இரண்டரை ஆண்டு காலத்தையும் பயன்படுத்த அவகாசம் கிடைத்தது.’’

யாழ். மாவட்டத்தில் ஒரு யுத்தவெறி அரசாங்கத்தினால் அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்ட பிரச்சினைக்கு வருகையில் மாணவர்களின் மகஜர் மேலும் குறிப்பிடுவதாவது: ‘‘எமக்கு மின்சாரம் இல்லை. மண்ணெண்ணெய் விநியோகம் பெரிதும் வரையறுக்கப்பட்டிருந்ததோடு சில சமயங்களில் ஒரு லீட்டர் ரூபா 200/- க்கும் சென்றது. போத்தில் லாம்பு மட்டுமே ஒரே வழி. வாசிப்பு சாதனங்களுக்கும் கருவிகளுக்கும் தட்டுப்பாடு நிலவியது. உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடும், வைத்திய வசதிகள் இன்மையும் பாதுகாப்புப் படையினரின் ஷெல் அடிகளும் குண்டு வீச்சுக்களும் மாமூல் வாழ்க்கையை அசாத்தியமாக்கின. பாடசாலைகள் அடிக்கடி மூடப்பட்டன. பல பாடசாலைகள் அவற்றின் நிஜ அமைவிடங்களில் இருந்து இடம் பெயர்ந்து தற்காலிக கொட்டில்களில் இயங்கின. தீவுப் பகுதிகள் வலிகாமம் வடக்கு, வடமராட்சி கிழக்கு போன்ற பகுதிகளில் பரந்தளவிலான குடிசன இடம்பெயர்வு ஏற்பட்டது. போக்குவரத்து வசதிகள் இல்லாததால் பாடசாலைக்கு மாணவர்கள் மைல் கணக்கில் கால்நடையாக செல்லவேண்டியிருந்தது அல்லது சைக்கிள் உழக்கவேண்டியேற்பட்டது.’

மாணவர் பிரதிநிதிகள் இந்த நிலைமைகளையிட்டு ‘‘தொழிலாளர் பாதை’’ (கம்கறு மாவத்த)யிடம் பேசுகையில் கூறியதாவது: ‘‘பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், மற்றும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின்மையால் நாம் புள்ளிகளை இழந்தோம். நாம் எப்படி இத்தகைய போட்டிக்கு முகம் கொடுக்க முடியும்?’’ எனக் கேட்டனர்.

யுத்தத்தினால் சிதறுண்டு போன யாழ்ப்பாண மாவட்டத்தின் இச்சகல கஷ்டங்களுக்கு மத்தியில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் தமிழ் மாணவர்கள் மேல் திணிக்கப்பட்டுள்ள ‘‘வெட்டுப்புள்ளி’’ சில துறைகளைப் பொறுத்தமட்டில் கொழும்பு மாவட்டத்தையும் விட கூடிய தாகவுள்ளது. உதாரணமாக

பொறியியல் துறை (I) யாழ்ப்பாண மாவட்டம் - 290 புள்ளி
கொழும்பு மாவட்டம் - 289 புள்ளி.

பொறியியல் துறை (II)
யாழ்ப்பாண மாவட்டம் — 284 புள்ளி
கொழும்பு மாவட்டம் — 283 புள்ளி

‘‘உண்மையில் அனுமதி முற்றிலும் திறமையின் அடிப்படையில் செய்யப்படுமேயாயின் எம்மில் பெருந்தொகையானோர் — கஷ்ட நஷ்டங்களுக்கு மத்தியிலும் பல்கலைக்கழகங்களுள் நுழைவர்’’ என மாணவர் பிரதிநிதிகள் எமது நிருபர்களிடம் தெரிவித்தனர்.

1972ல் அமுலுக்கு வந்த இனவாத ‘தரப்படுத்தலின்’ சிருஷ்டி கர்த்தாக்கள் இன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் முன்னோடிகளேயாவர். அன்றைய கட்டத்தில் சி.ல.சு.க-சமசமாஜ-கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் இந்த தரப்படுத்தல் முறை ‘வசதிவாய்ப்புக்களற்ற மாணவர்களை வசதிவாய்ப்புக்கள் நிறைந்த மாணவர்களின், (யாழ்ப்பாணம்) தரத்துக்கு கொணரவே அமுலுக்கு கொணரப்பட்டதாக வாதிட்டது இந்த பிற்போக்கு வாதத்தினை அம்பலப்படுத்தும் விதத்தில் ‘‘பாதிக்கப்பட்ட மாணவர்களின்’’ மகஜர் குறிப்பிடுவதாவது: ‘‘இன்றைய அனுமதித் திட்டமும் அதன் அமுலாக்கல் முறையும் எம்மைக் கடுமையாகப் பாதித்துள்ளது, சமீபத்தில் வெளியிடப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்துக்கான வெட்டுப்புள்ளிகள் கிட்டத்தட்ட சகல சௌகரியங்களையும்கொண்ட கொழும்பு போன்ற மாவட்டங்களுடன் ஒரே நிரலில் உள்ளது, இது நியாயமானதா? சமீப காலங்களில் யுத்தத்தினால் அடிப்படைத் தேவைகளும் மறுக்கப்பட்டு மன அதிர்வுகள் ஏற்பட்டுள்ள ஒரு நிலையில் இன்றைய அனுமதி முறை தொடர வேண்டுமானால் யுத்தத்தினால் சிதறுண்டு போன யாழ்ப்பாணம் ஏன் ஒரு வசதிவாய்ப்புக்கள் அற்ற பிராந்தியமாகக் கணிக்கப்படக் கூடாது?’’ எனவும் இம் மாணவர் கேள்வி எழுப்பியுள்ளனர்.



வடக்கு-கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றக் கோரும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக ஊர்வலம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சகல துறைகளுக்கும் பல வெற்றிடங்கள் இருந்து வருகையில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஏன் அதிக மாணவர்கள் அனுமதிக்கப்படக் கூடாது எனவும் கேட்கின்றனர். இது யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினால் மட்டுமன்றி பல்கலைக்கழக நிர்வாகத்தினாலும் கூட ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் இந்தப் போராட்டத்துக்கு தமது ஆதரவை வழங்கும் விதத்தில் வெளியிட்ட அறிக்கையில் ‘‘ஒரு உயர்ந்த வெட்டுப் புள்ளிகளை வைத்துக்கொள்வதென எடுத்த முடிவு மாணவர் அனுமதியை வெளிப்படையாக கட்டுப்படுத்துவதோடு, மிகவும் இலகுவான முறையில் மாணவர்களுக்கு கிடைக்கக் கூடியதாய் உள்ள வளங்கள் கூட வீணாகிப் போகவும் இட்டுச் செல்கின்றது. இந்த விதத்தில் யாழ்ப்பாணம் கொழும்பு மாவட்டங்களுக்கு ஒரே வெட்டுப் புள்ளியை வைத்திருப்பதானது நீதி, நேர்மை பற்றிய ஒரு பாரதூரமான பிரச்சினையை எழுப்புகின்றது.’’

இம் மாணவர் தூதுக் குழுவில் ;
எஸ். மயூரதாஸ் (மகாஜனா)
ஜே. ஜெயசுதன் (ஹார்ட்லி)
ரீ. செல்வ முரளி (ஹார்ட்லி)
ஆர். ரஞ்சிதம் (ஹார்ட்லி)
வீ. கஜேந்திரன் (யாழ். இந்து)
பீ, பிரியதர்ஷன் (யாழ். இந்து)
என். அஜந்தா (சாவகச்சேரி இந்து)
ஆர். தேவகி (வேம்படி)
என்போர் அடங்கியிருந்தனர்.

# கைது செய்யப்பட்ட சகல தோட்ட இளைஞர்களையும்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகளின் இலாப வெறியை இட்டு நிரப்புவதற்கான தாக்குதல் உலகளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றது, ஏகாதிபத்தியவாதிகளின் நெருக்கடி உக்கிரமடையும் அளவுக்கு இத்தாக்குதலும் உக்கிரம் அடைகிறது; விரைவுபடுத்தப்படுகின்றது, தோட்டத் தொழிலாளர் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு கட்டவிழ்க்கப்பட்டு வரும் ஒடுக்கு முறையை இந்த உலக நிலைமையில் வைத்து அணுக வேண்டும்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் முழு தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராகக் கட்டவிழ்த்துவிட்டுள்ள ஒடுக்குமுறைத் தாக்குதல் இக்கட்டத்தில் பியகம அன்சல் லங்கா கம்பனி, பெல்வத்தசீனித் தொழிற்சாலை, இரணவில ஆகிய இடங்களில் மூன்று தொழிலாளர் உயிர்களைப் பலி கொண்டுள்ளது, கட்டுநாயக்க கொரியா-சிலோன் தொழிலாளர்களுக்கு பக்டரியின் உள்ளே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இந்நிலைமையின் உள்ளே இலங்கையிலும் தமிழ் ஈழம் பிராந்தியங்களிலும் உள்ள தொழிலாளர்கள் ஒன்றிணைந்து ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவுடன் முதலாளி வர்க்கத்தில் இருந்து சுயாதீனமாகி தமது போராட்டத்தினை ஒழுங்கு செய்யும் பெரும் அவசியம் தினமும் வளர்ச்சி கண்டு வருகின்றது. இந்தியத் துணைக் கண்டத்திலும் அனைத்துலகிலும் தொழிலாளர் வர்க்கத்தின் ஆதரவைத் திரட்டிக்கொண்டு இப் போராட்டத்தினைத் தொடுக்க வேண்டும்.

தோட்டத் துறையிலும் மற்றும் சகல இடங்களிலும் தொழிலாளரின் முன்னிலையில் இந்த தீர்க்கமான அவசியம் தலைதூக்கி உள்ள ஒரு நிலைமையில் இ.தொ.கா.-மலையக மக்கள் முன்னணி புளொட் - ஈ.பீ.டீ.பி. முதலான அமைப்புக்கள் ‘‘ஐக்கிய மேடை’’ என்ற பேரில் ஒரு முன்னணி அமைத்துக் கொண்டு தோட்டத் தொழிலாளர்களை ஏனைய தொழிலாளர்களில் இருந்து பிளவுபடுத்தும் நடவடிக்கையில் குதித்துள்ளன. தோட்டத் தொழிலாளர்கள் ஒரு ‘‘சிறப்பு தேசிய இனக்குழு’’ வாதலால் அவர்களுக்கென வேறான ஒரு ‘‘பிராந்திய சபை’’ வழங்கப்பட வேண்டும் என இம்முன்னணியின் பங்காளிகளில் ஒருவரான பீ. சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணி பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு பிரேரணை சமர்ப்பித்துள்ளது.

பீ. சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணி இந்த இனவாரி தனிச் சிறப்புரிமை வாதப் பிரேரணையை சமர்ப்பித்துள்ளமை தோட்டத் தொழிலாளர்களின் மீதான கருணையினால் அல்ல.

(9ம் பக்கம் பார்க்க)

# தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் மாநாடு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

''தொழிலாளர் – ஒடுக்கப்படும் மக்களுக்கு ஒரு வழி தான் உள்ளது. அது பொது எதிரியான முதலாளித்துவத்துக்கு எதிராக அனைத்துலக ரீதியில் தனது வர்க்க சகோதரர், சகோதரிகளுடன் ஒன்றிணைந்து உலக சோசலிசப் புரட்சிக்குப் போராடுவதே'' எனக் குறிப்பிட்ட அந்த நல்வாழ்த்துச் செய்தி பின்வருமாறு நிறைவுபெற்றது: ''நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளையாக இந்தியத் துணைக்கண்டத்தின் ஒன்றிணைந்த புரட்சிகர தொழிலாளர் வர்க்கக் கட்சிக்கான போராட்டத்துக்குப் பூரண ஆதரவளிக்கும் அதே வேளையில் அப்போராட்டத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இட்டு நிரப்பியுள்ள பாத்திரத்தினை நாம் பெரிதும் மதிக்கின்றோம்.''

இதைத் தொடர்ந்து தமது அரசியல் அறிக்கையை முன்வைத்த விஜே டயஸ் 1994 ஆகஸ்ட் பொதுத் தேர்தலுக்கு முன்னராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் ''உழைக்கும் மக்களே! ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளதும் அவர்களின் இடதுசாரி கோலம் பூண்டுள்ள எடுபிடிகளதும் மோசடிகளுக்கு ஏமாந்து விடாதீர்கள்!'' என பொதுமக்களுக்கு விடுத்த எச்சரிக்கையை நினைவூட்டிய விஜே டயஸ் அந்த விஞ்ஞாபனத்தில் இன்னும் சிலவற்றை மேற்கோளாகக் காட்டினார்.

இந்த எச்சரிக்கையை கடந்த 7 மாதங்களில் எவ்வளவுக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது? என்பதை சற்று நினைவுபடுத்திப் பார்க்குமாறு விஜே டயஸ் மகாநாட்டை வேண்டினார். ''இந்த தீர்க்கதரிசனத்தினை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அடைய முடிந்தமைக்கு இக்கட்சி விஞ்ஞான பூர்வமான மார்க்சிச கோட்பாட்டின் வழிகாட்டலில் இயங்குவதே காரணம். நன்கு திட்டவட்டமாகச் சொன்னால் ட்ரொட்ஸ்கிச நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டினால் ஆயுதபாணியாக்கப்பட்டிருப்பதே காரணம். உலக சோசலிசப் புரட்சிக் கோட்பாட்டான நிரந்தரப் புரட்சிக் கோட்பாடு இன்றைய சகாப்தத்தில் எந்தவொரு நாட்டிலும் முதலாளி வர்க்கத்தினால் எந்தவொரு முற்போக்கு பாத்திரத்தினையும் இட்டு நிரப்ப முடியாது; ஆதலால் முதலாளி வர்க்கத்தில் இருந்து முழுமனே சுயாதீனமாக தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களின் தலைமையைக் கொண்டு முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி வீசி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளவேண்டும்.

''பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் அதன் ஜனாதிபதி வேட்பாளரான சந்திரிகா குமாரதுங்கவுக்கும் வாக்குப் பிச்சை கேட்ட இயக்கங்களும் அமைப்புக்களும் இந்த விஞ்ஞான பூர்வமான உண்மைக்குப் புறமுதுகு காட்டியதன் காரணமாக மக்கள் துரோகிகள் ஆகியுள்ளனர்.

''இதனைச் சிந்தனை ஆற்றல் படைத்த தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் நினைவில் கொள்ளவேண்டிய ஒரு படிப்பினையாகும்.'' என விஜே டயஸ் சுட்டிக்காட்டினார்.

''பொருளாதார ரீதியில் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் வேலையற்றோருக்கும் முதலாளித்துவ பொதுஜன முன்னணி வழங்கிய வாக்குறுதிகள் ஏற்கனவே புஷ்வாணமாகி விட்டுள்ளதை நான் விளக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் ஜனாதிபதி தேர்தலில் வாக்குக்களை சூறையாடும் பொருட்டுச் செய்த விலைக் குறைப்புக்களும் இன்று தலைகீழாகி உள்ளன.

''இன்று விலைக் குறைப்புச் செய்த பாணின் விலையை தலைகீழாக்குவது பற்றிப் பேசிக்கொள்கிறார்கள். ஏழை மக்களுக்கு 3/50 பாணும் கை நிறையப் பணம் உள்ளவர்களுக்கு உயர்ந்த விலைப் பாணும் வழங்குவது பற்றி அரசாங்கம் இப்போது ஆலோசித்து வருகின்றது. இது பணக்காரனுக்கு வயிற்றை நிரப்பும் பாணும் ஏழைக்கு வயிற்றைக் குடையும் பாணும் வழங்கும் திட்டமாகும். கடந்த யுத்த காலத்தில் 'முதலாளிகளுக்கு சோறு ஏழைகளுக்கு காரல் பயறு'' கொள்கையைத் திரும்பவும் நடைமுறைக்கிட பொதுஜன முன்னணி செயற்படுகின்றது.

''சமுர்த்தி (செழிப்பு). ஜனநாயகம், சமாதானம் என்ற முக்கிய மூன்று சுலோகங்களை முன்வைத்த பொதுஜன முன்னணி அரசாங்கம் சமுர்த்தியை இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திப்போட்டுள்ளது. இந்தக் கால அவகாசம் படுமோசமான ஒரு மோசடியாகும். பொதுஜன முன்னணி காலடி வைத்துள்ள முதலாளித்துவ பொருளாதாரம் உலகளாவிய ரீதியில் தலைமூழ்கிக்கொண்டுள்ளதே இதற்குக் காரணம். ஏனைய இரண்டில் ஜனநாயகத்துக்கு நேரிட்டுள்ள தலைவிதி என்ன? பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகங்கள் மூலம் பல இடங்களில் தொழிலாளர்கள், மீனவர்களை கொன்று தள்ளியுள்ள இந்த அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தினை தொடர்ந்தும் அமுலில் வைத்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நூற்றுக் கணக்கானோர் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர், இந்த அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணர ஊழையிட்ட பத்திரிகையாளர்கள் இன்று தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகி ஜனநாயகத்தை ஊர்ஜிதம் செய்வார் எனக் கூறிக்கொண்ட ஜே வீ. பி. யின் துரோகத்தினை நாம் ஒருபோதும் மறந்துபோய் விடக்கூடாது.

''இவை அனைத்தினதும் அடிப்படையிலேயே இன்று தொழிலாளர் பிணக்குகளில் தலையிடும் விசேட பொலிஸ் படைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளது. முதலாளித்துவ அரசாங்ககம், தொழில் அதிபர்கள், தொழிற்சங்க அதிகாரத்துவம் என்ற முக்கூட்டினரதும் ஐக்கியத்தினை சிருஷ்டிக்கும் முயற்சியில் சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ, இ. தொ. கா. மற்றும் தொழிற்சங்க தலைமைகள் ஈடுபட்டுள்ளன. இதன்மூலம் முதலாளித்துவ அரசின் அடிமை-நிர்வாக நிபந்தனைகளை தொழிலாளர்மீது திணிக்க முயற்சிக்கப்படுகின்றது இதனைத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டும்.

''சமுர்த்தியை அதிகரிப்பது பற்றியும் ஜனநாயகத்தை எழுந்தருளச் செய்வது பற்றியும் நடாத்திய பொதுஜன முன்னணியின் கதையளப்புக்கள் இருந்த இடமும் தெரியாமல் போனதோடு, இன்று ஏகாதிபத்தியவாதிகளும், அரசாங்கமும் அவர்களது வக்கீல்களும் கதையளக்கும் துரும்பாக சமாதானத்தை சிருஷ்டிப்பது மாறியுள்ளது. இதற்காக மேற்கே அமெரிக்காவில் இருந்து ஐரோப்பியக் கூட்டின் ஊடாக கிழக்கே அவுஸ்திரேலியா வரை ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் நெருக்கி வருகின்றனர்.

''வடக்கு – கிழக்கு மாகாணங்களில் அதிகாரத்தினைக் கொண்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான கூட்டின் மூலம் ஏற்படுத்தியுள்ள யுத்த நிறுத்தத்தின் கீழ் வடக்கு, தெற்கு முதலாளிகள்

(8ம் பக்கம் பார்க்க)

---

# கைது செய்யப்பட்ட சகல தோட்ட இளைஞர்களையும்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டத் தனியார் மயமாக்கத்துக்கும் வேலைத் துரிதப் படுத்தலுக்கும் தோட்டத் தொழிலாளர் வேலை நீக்கங்களுக்கும் மலையக மக்கள் முன்னணியும், இ. தொ. காவும் முழுமனே ஆதரவளிக்கின்றன. சந்திரசேகரனும் தொண்டமானும், தொழிலாளர்களைப் பொலிசாரிடம் பிடித்துக்கொடுக்கும் ஆட்களாகத் தொழிற்படுவதாக தொழிலாளர்களே குற்றம் சாட்டி வருகின்றார்கள். இவர்களுக்கு 'பிராந்தியசபைகள்' அவசியப்படக்காரணம்? தொழிலாளர்களைத் தமது ஆதிக்கத்தினுள் ஒடுக்கிவைக்கவும் தமது முதலாளித்துவ சுரண்டலை வளர்ச்சி காணச் செய்யவும் எல்லாவற்றுக்கும் மேலாக சுதந்திர வர்த்தக வலயங்களில் ஏகாதிபத்திய கம்பனிகளின் கைக்கூலிகளாக தொழிலாளர்களை விற்றுத் தள்ளுவதன் மூலம் நமது முதலாளித்துவ அபிலாசைகளை வளர்த்துக் கொள்ளப் பார்க்கின்றனர், விடுதலைப் புலிகள் இன்று செய்வதும் இதுவே,

## சிறப்புரிமை

தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் இந்த தேசிய சிறப்புரிமைவாத வேலைத் திட்டத்தினை அடியோடு நிராகரிக்க வேண்டும். இலங்கையின் சிங்கள முதலாளிகள் 1948 ல் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை ஒழித்துக்கட்டி சிங்களம் - தமிழ் பேசும் தொழிலாளர்களைப் பிளவுபடுத்தி இனவாதத்தினை தூண்டுவதன் மூலம் தமது வர்க்க ஆட்சியைக் கொண்டு நடாத்த முயன்றனர், ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியும் 1960பதுகளில் இருந்து லங்கா சமசமாஜக் கட்சியும் இந்தப் பிரிவினைக்கு பந்தம் பிடித்ததோடு தோட்டத் துறையினுள் இ தொ, கா. வுக்கும் பின்னர் மலையக மக்கள் முன்னணி போன்ற குட்டி முதலாளித்துவ அமைப்புக்களின் வளர்ச்சிக்குமான நிலைமைகளைச் சிருஷ்டித்தனர். இன்று சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணி மூலம் இந்த சிங்கள இனவாத தீயில் தமது சிறப்புரிமைவாத எண்ணெய் வார்க்கத் தொடங்கியுள்ளனர்.

எந்த நிலையில்? பொதுஜன முன்னணியும் ஏனைய முதலாளிகளும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இனவாதத்தை உக்கிரமாக்கும் ஒரு நிலைமையிலேயே யாகும்.

சிங்கள இனவாதிகளுக்கும் சந்திரசேகரனின் தேசிய சிறப்புரிமைவாதங்களுக்கும் எதிராக சிங்கள – தமிழ் மொழி பேசும் தொழிலாளர்கள் அனைத்துலகவாதத்தின் பிடிப்பின் கீழ் பொதுஜன முன்னணி அரசாங்கம் முதலாளிகள், முதலாளித்துவ ஏஜண்டுகள் ஒன்றிணைந்து நடாத்தும் தாக்குதலுக்கு எதிரான போராட்டத்துக்குக் கிளயப வேண்டும்.

இன்று எம் கண்முன்னால் நிரூபிக்கப்பட்டு உள்ளது என்ன? தொழில், வாழ்க்கைத் தரம், நலன்புரிச் சேவை, சேவை நிலைமைகள் மற்றும் உரிமைகளை பாதுகாக்க ஏகாதிபத்திய, முதலாளித்துவ தனியார் கம்பனிகளையும் அரச நிறுவனங்களையும் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்கும் சோசலிச வேலைத் திட்டத்தினை நடைமுறைப் படுத்த வேண்டும். வடக்கு - கிழக்கு மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளைக் காப்பதும், தோட்டத் தொழிலாளர் குடியுரிமையையும் மற்றும் ஜனநாயக உரிமைகளையும் ஊர்ஜிதம் செய்வதும் அரச பொலிஸ் - குண்டர் ஒடுக்குமுறைகளையும் இனவாத பிளவுகளையும் ஒழிப்பதும் முதலாளித்துவ ஆட்சியின் கீழ் அடைந்துவிடக் கூடியவை அல்ல. சோசலிச வேலைத் திட்டத்தினை அமுல் செய்யவும் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்யவும் முதலாளி வர்க்க ஆட்சியைத் தூக்கிவீசி, தொழிலாளர் - விவசாயிகளின் ஒரு அரசாங்கத்தினை - இலங்கை தமிழ் ஈழம் சோசலிச குடியரசாக ஆட்சிக்குக் கொணர வேண்டும். இந்தியத் துணைக் கண்ட சோசலிசக் குடியரசு ஒன்றியத்தினதும், உலக சோசலிசப் புரட்சியின் முன்நோக்கினதும் அடிப்படையிலான தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன வேலைத்திட்டம் இதுவே.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்த வேலைத் திட்டத்தினை தோட்டங்களிலும் மற்றும் இடங்களிலும் உள்ள தொழிலாளர். ஒடுக்கப்படும் மக்களின் முன் வைக்கின்றது.

அடியோடு நாற்றம் கண்டு போன முதலாளித்துவ ஏஜன்சியான இ தொ. கா, மலையக மக்கள் முன்னணி, சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ கட்சிகள், தொழிற்சங்கங்களினால் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் நன்மை எதுவும் இல்லை. அவை எதிரி ஒடுக்குமுறையாளனின் ஆயுதங்கள் தோட்டத் தொழிலாளர்கள் தமது சுயாதீனமான அரசியல் தொழிற்பாட்டுக்காக தொழிலாளர் நடவடிக்கை குழுக்களை கட்டியெழுப்புவது அவசியம். தமக்கு எதிராக முதலாளிகள் தூண்டிவிட முயற்சிக்கும், ஆனால் படுமோசமான ஒடுக்குமுறைக்கு ஆளான கிராமவாசிகள், இளைஞர்களை முதலாளிகளுக்குஎதிராக அந்த நடவடிக்கை குழுக்களுள் அணிதிரட்ட வேண்டும்.

அரசினதும் குண்டர்களதும் அடக்குமுறையில் இருந்து பாதுகாப்புப் பெறும் பொருட்டு தொழிலாளர்கள் தமது பாதுகாப்பு கமிட்டிகளை அமைக்க வேண்டும். இவற்றின் ஆரம்ப நடவடிக்கையாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அமைந்துள்ள 'தோட்டத் தொழிலாளர் பாதுகாப்பு குழு'விற்கு ஆதரவளிக்கும்படி நாம் வேண்டுகின்றோம்.

தோட்டத் துறையிலும் மற்றும் சகல இடங்களிலும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையே பு.க.க. புதிய முன்நோக்கையும் வேலைத் திட்டத்தினையும் முன்வைத்துள்ளது. பு.க.க வில் சேர்ந்து அப்போராட்டத்தினை அபிவிருத்தி செய்யும்படியும் நாம் தொழிலாளர்களை வேண்டுகின்றோம்.

★ கைது செய்யப்பட்ட சகல தோட்டத் தொழிலாளர் இளைஞர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்!

★ சிங்கள இனவாதத்துக்கும் தேசிய சிறப்புரிமை வாதங்களுக்கும் எதிராக தொழிலாளர்களின் அனைத்துலகவாத ஐக்கியத்தைக் கட்டியெழுப்பு!

★ தனியார் மயம் உட்பட்ட தாக்குதல்களுக்கு எதிராக சோசலிச வேலைத்திட்டத்துக்குப் போராடு!

# தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்கள் மாநாடு...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

இடையே ஆட்சியை பங்கிட்டுக்கொள்ளும் ஒரு திட்டம் இருந்துவருவது உண்மையாகியுள்ளது. அது தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை வழங்கி சகவாழ்வுக்கான சமாதானத்துக்கு அத்திவாரமிடும் என அரசியல் அறிவிலிகள் மட்டுமே நம்ப முடியும். உண்மையில் அது வடக்கில் மட்டுமன்றி தெற்கிலும் தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களை இரத்தக் களரியினுள் மூழ்கடிக்கும் ஒரு இராணுவ - பாசிச சர்வாதிகாரத்தினை சிங்கள - தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் முதலாளிகளின் பங்களிப்புடன் கட்டியெழுப்புவதாகும்.

''இந்த சமாதான பேச்சுவார்த்தை எனப்படுவதற்கு மத்தியில் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான காட்டுமிராண்டி யுத்தத்தினை கட்டவிழ்த்துவிடும் பிரச்சாரத்தில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதன் மூலம் இதனைப புரிந்துகொள்ள முடியும். ''தோட்டப் பங்குகளை பகிர்ந்து கொள்ளுவோம் வாருங்கள்!'' என்ற அலுகோசு கோசத்தின் கீழ் பலாத்காரமான முறையில் இராணுவத்துக்கு ஆட்களைத் திரட்டுவதன் மூலம் இலட்சோப லட்சம தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு எதிரான மக்கள படுகொலை யுத்தத்தினை தயார் செய்யும் திட்டம் இருந்து வருகின்றது. தோட்டத் தொழிலாளர்களின் இரத்தப் பங்குகள் எமக்கு வேண்டாம்! தோட்டத் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தோட்டங்களை தேசிய மயமாக்கு! என்ற சுலோகங்களின் அடிப்படையில சிங்கள - தமிழ் தேசிய இனங்கள் இரண்டினையும் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களும் நகர்புறத் தொழிலாளர்களும ஒடுக்கப்படும் மக்களும முன்னணியில் நிற்க வேண்டும். இந்தப் பிரச்சாரத்தில் சகல துரோகத் தலைவர்களுக்கும் எதிராக பு. க. க. முன்னணியில நின்று போராடும். அது முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி வீசி, தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்கவும் இலங்கை - தமிழ் ஈழம் சோசலிச குடியரசினை நிறுவவும் நடாத்தி வரும் போராட்டத்தின் நடுமையமாக விளங்கும். அனைத்துலக சோசலிசத்துக்கான முன்நோக்கின் கீழ் இந்தியத் துணைக்கண்ட சோசலிச குடியரசினை நோக்கி தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் பொறுப்புக்கு இம்மாநாடு தோள் கொடுக்கின்றது என்பதைப் புரிந்துகொண்டு அதற்குத் தமது அதி உயர்ந்த சக்தியை தியாகம் செய்ய முடிவு செய்வது அவசியம் என நாம் மீண்டும சுட்டிக் காட்டுகின்றோம்.''

## பலம்வாய்ந்த கலந்துரையாடல்

அரசியல் அறிக்கையைத் தொடர்ந்து மிகவும் பலம் வாய்ந்ததும் உயிர்ப் புஷ்டியானதுமான கலந்துரையாடல் இடம்பெற்றது. மாநாட்டுக்கு வருகை தந்திருந்த தொழிலாளர்கள், ஒடுக்கப்படுவோர், இளைஞர்கள் மிகவும் உற்சாகத்துடன் இதில் கலந்துகொண்டனர். ஆசிரியர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், தோட்டத் தொழிலாளர்கள், ஆடைக் கைத்தொழில் பெண் தொழிலாளர்கள், கூட்டுறவு ஊழியர்கள். தாதிகள் என்ற பல தரப்பினரும கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். அவர்கள் தம் சம்பந்தப்பட்ட துறைகளில் பொதுஜன முன்னணி அரசாங்கம் தாக்குதல் நடாத்தும் முறையையும் தொழிலாளர்கள், ஒடுக்கப்படுவோர், இளைஞர்கள் முகம் கொடுத்துள்ள பல்வேறு அரசியல் பிரச்சினைகளையும் தெளிவுபடுத்திப் பேசினர்.

கலந்துரையாடலுக்குப் பதிலளிக்கும் விதத்தில் தமது பதிலுரையை நிகழ்த்திய தோழர் விஜே, இம்மாநாட்டின கலந்துரையாடல் ஏகாதிபத்தியவாதிகளதும், ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளதும் கோபன்ஹேகன் மகாநாட்டின் கலந்துரையாடலை விட பெரிதும் வெற்றி கண்டுள்ளது எனக் குறிப்பிட்டார். ''சமூக அபிவிருத்தி'' என்ற கதையளப்புக்களுடன் இடம் பெற்ற கோபன்ஹேகன் மகாநாட்டில் ஒவ்வொரு நாடுகளதும் மொத்த தேசியஉற்பத்தியில் சமூக அபிவிருத்திக்கெனப் பயன்படுத்தப்படும் வளங்களின் அளவுகளை 3 வீதத்தில் இருந்து 7 வீதம் வரை அதிகரிக்குமாறு கொணரப்பட்ட பிரேரணையை சகல ஏகாதிபத்திய நாடுகளதும் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து தோற்கடித்த விதத்தினை அவர் நினைவுபடுத்தினார். அவ்வாறே மோசமான கடன் சுமையால் நசுங்குண்டு போய்க் கிடக்கும் பின் தங்கிய நாடுகளிற்கு ஏதேனும் சலுகை வழங்கும்படி கோரி கோபன்ஹேகன மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையும் தோற்கடிக்கப் பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

உலகின் முதலாளித்துவ ஆட்சியாளர்களின் கோபன்ஹேகன் மகாநாட்டின் தோல்விக்கு காரணம், அவை பிரதிநிதித்துவம் செய்யும் பொருளாதார அமைப்பு இன்றைய நிலையில் பூகோள ரீதியில் வீழ்ச்சி காணும கட்டத்தை அடைந்துள்ளதே, அவர்கள் திரும்பியுள்ளது சமூக அபிவிருத்தியின் பக்கம் அல்ல: சமூக அழிவின பக்கம் ஆகும்'

''வளர்ச்சி கண்டுள்ள உற்பத்திச் சக்திகளை மனித இனத்தின் நன்மைக்காக முற்போக்கான முறையில் திட்டமிட்டுப் பயன்படுத்துவது உலக சோசலிசத்தின கீழ் மட்டுமே சாத்தியம், அதற்காகத் தொழிலாளர் வர்க்கம் அனைத்துலகவாத அடிப்படையில நனவான முறையில் காலூன்றி நிற்பதும் சோசலிசப புரட்சிக்கான அரசியல் ரீதியில் தலைமை தாங்குவதும அவசியம்.

''இந்த அரசியல் ஆரம்பிப்புக்கு தொழிற்சங்கவாதம் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக நின்றுகொண்டுள்ளது. தொழிற்சங்கவாதம் ஆரம்பத்தில் இருந்தே தொழிலாளர்களை அரசியல் ரீதியில் அகதிகளாக்குவதாக விளங்கிற்று. தரா நிலையியல்வாத கோரிக்கைகளுள் தொழிலாளர்களை சிறைவைப்பதாய் இருந்தது.

''விஞ்ஞான சோசலிசம் நிறுவபபடுவதற்கும் முன்னர் பிரித்தானிய பட்டய இயக்கம் (Chartist) தனது முன்நோக்காக ''நாம் வாக்குஉரிமையை வெற்றிகொண்டு அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் அதன் பின்னர் நாம் சமூகத்தை மீள கட்டியெழுப்புவோம்'' என்பதைக் கொண்டிருந்தது. தொழிற்சங்கவாதத்தின் மூலம் இந்த அரசியலை பின்வாங்கச் செய்ய பிரித்தானிய முதலாளி வர்க்கம் கொண்டிருந்த முடியாட்சி பலத்தினை கையாள்வதிலும் வெற்றி கண்டது.

''இலங்கையிலும் ஆரம்பத்தில் கட்டியெழுப்பப்பட்ட முதலாவது தொழிற்சங்கம் 1930 களின் பொருளாதார வீழ்ச்சியின் கீழ் முதலாளித்துவத்தின் அப்பட்டமான கைக்கூலியாக மாறி இனவாதத்திற்கு தோள் கொடுப்பதற்கு எதிராகவே 1935ல் சமசமாஜக் கட்சி நிறுவப்பட்டது.

சமசமாஜக்கட்சியின் உள்ளே இடம்பெற்ற அரசியல் போராட்டத்தின் மூலம் அதற்குள் தேசியவாத ஸ்டாலினிச போக்கினை ஒழித்துக்கட்டவும் தேசியவாதத்துக்கு எதிராக உலக சோசலிசப் புரட்சியின் கட்சியான நான்காம் அகிலத்தின் கிளையாக முழு இந்தியத் துணைக் கண்ட போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சியை அமைக்கவும் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் முன்னணியில் நின்றனர்.

''சமசமாஜக் கட்சி 1950 களில் பப்லோவாதத்தின் கீழ் இப்பாரம்பரியங்களைக் கைவிட்டுவிட எடுத்த போக்குக்களையேஇன்று பேர்னாட் சொய்சா, பற்றி வீரக்கோன், நாணயக்கார, விக்கிரமபாகு கருணாரத்ன முன்னெடுக்கின்றனர் . அவர்களின் பிற்போக்கு வர்க்க உடனுழைப்புக்கு பொருத்தமான விதத்தில் அவர்கள் ஸ்டாலினிஸ்டுகளுடன் ஒரு தனிக் கட்சியை அமைத்துக்கொண்டு ஏகாதிபத்திய சார்பு ஆளும் வர்க்கத்தின் அலுகோசு வேலைகளுக்குத் தோள் கொடுக்க இன்று திரும்பியுள்ளனர்.

''தொழிலாளர் வர்க்கத்தினுள் புதிய புரட்சிகர முன்நோக்கினையும் தலைமையையும் ஸ்தாபிதம் செய்து, அதைச் சூழ ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டுவதன் மூலமே இந்தகாட்டிக்கொடுப்புக்களை சிரச்சேதம் செய்ய முடியும். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதற்காகவே போராடுகின்றது. அந்தப் போராட்டத்தில் இணையுமாறு இந்த மாநாட்டில் கலந்துகொண்டுள்ள அனைவரையும் வேண்டுகின்றோம்'' என விஜே டயஸ் குறிப்பிட்டார்,

'தொழிலாளர் வர்க்கத்துக்கு அவசியமான புதிய முன்நோக்கையும் தலைமையையும் கட்டி எழுப்புவோம்' என்ற மாநாட்டு பத்திரமும் தோழர் விஜே டயஸ் மாநாட்டுக்கு சமர்ப்பித்த அரசியல் அறிக்கையும் அதைத் தொடர்ந்து அவர் ஆற்றிய பதிலுரையும மாநாட்டில் ஏகமனதாக நிறைவேறியது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் தொடுக்கப்பட்டுள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை கட்டியெழுப்பும் ரூபா 100,000/- நிதிக்கு மாநாட்டில் இருந்து ரூ. 960/- திரட்டப்பட்டதோடு மாநாட்டின் நுழைவாயிலில் அமைந்திருந்த பு.க.க. வெளியீடுகள் மையத்தில் இருந்து ரூபா 1418/- பெறுமதியான மார்க்சிச பிரசுரங்கள் விற்பனையாகின. மாநாடு அனைத்துலகக் கீதம் இசைக்கப்பட்டதுடன் நிறைவுபெற்றது.

# பொது ஜன முன்னணி துப்பாக்கிப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமரத்னவின் கொலைக்கு பொதுஜன முன்னணி அரசாங்கமே பொறுப்பு என்ற உண்மையை பு.க,க. அம்பலப்படுத்தும் என்ற நியாயமான பீதியே அவர்களை ஒன்றிணைய வைத்தது. இந்த உண்மையை காட்டும் விதத்தில் பிரேமரத்னவின வீட்டுக்கு சமீபமாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கட்டியிருந்த பதாகையை அகற்றிவிட ஸ்டாலினிஸ்டுகளும் ஜே. வீ. பி. காரர்களும் தலைகீழாக நின்றனர். இதன் பேரில அவர்கள் பிரேமரத்னவின் உறவினர்களையும பிடித்துப் பார்த்தனர். ஆனால் இந்த உண்மையை அம்பலப்படுத்தும் விதத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் சுவிகுவும பல்லாயிரக் கணக்கான துண்டுப் பிரசுரங்களை இறுதி ஊர்வலத்தின் வழிநெடுகில் மட்டுமன்றி, பியகம, கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்கள் இடையேயும் விநியோகித்தது.

## கொலையின் படிப்பினை

பிரேமரத்ன தொழிலாளியின் இரத்தத்தினால் வரையப்பட்ட படிப்பினையை சகல தொழிலாளர்களும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என பு. க. க. வேண்டுகின்றது. பிரேமரத்ன கொலைச் சம்பவம் தற்செயலான ஒன்றல்ல. இது பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிப் பீடம் ஏறி தொழிலாளர்களுக்கு எதிராக நடாத்திய முதலாவது கொலைத் தாக்குதலாகும், அக்டோபர் 5ம் திகதி அரசாங்கம் இரணவிலவில் 'அமெரிக்காவின் குரல்' (VOA) நிலையத்தை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மீனவ இளைஞனை — பெனட் பெர்னாந்துவை சுட்டுக்கொன்றது. தொழிலாளர் பதட்ட நிலையை ஒடுக்குவதற்கென ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட பொலிஸ் அங்கு டிசம்பர் 30ம் திகதி கட்டுநாயக்க சு. வ. வ. உள்ளமரிவு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கொறியா — சிலோன் கம்பனி தொழிலாளர்களை கட்டடத்தினுள் சிறை வைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இதனால் ஈ. எம். பி. எக்கநாயக்க என்ற தொழிலாளியின் கால்கள் பலத்த காயம் அடைந்தன,

பியகம துப்பாக்கிப் பிரயோகம் ஒரு வரலாற்று நிகழ்வும் ஆகும். ஏனெனில் 1953 ஹர்த்தாலின் தொழிலாளர் ஊர்வலத்திற்கு அன்றைய யூ.என்.பி. அரசாங்கம் துப்பாக்கிப் பிரயோகம் செய்து தொழிலாளர்களை கொன்றதன் பின்னர் தொழிலாளர்களின் ஊர்வலத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட முதல் தடவை இதுவே.

யூ.என்.பி. அரசாங்கம் ஏகாதிபத்தியவாதிகளின் காட்டுமிராண்டி சுரண்டலை உறுதி செய்யும் பொருட்டு நடாத்திய 17 ஆண்டுக்கால கொலைகார ஆட்சிக்கு எதிராக தொழிலாளர்கள் — ஒடுக்கப்படும் மக்களின் எதிர்ப்பு வளர்ச்சி கண்டு வரும் ஒரு நிலையில் சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ இ. தொ. கா. மலையக மக்கள் முன்னணி, ஜே.வீ.பி. கட்சிகளின் பங்களிப்புடன் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினை ஆட்சிப் பீடத்தில் அமர்த்த ஏகாதிபத்தியவாதிகளும் இலங்கை முதலாளிகளும் நடவடிக்கை எடுத்தனர். ஜே. வீ. பி. பாசிஸ்டுகளும் தமது பிற்போக்கு நடவடிக்கைகளில் ஈடுபட பொட்டலம் கட்டும் பொருட்டு தமது ஜனாதிபதி வேட்பாளரையும் போட்டியில் இருந்து விலக்கி பொதுஜன முன்னணி அரசாங்கத்தினை ஆட்சிக்கு கொணர தொழிற்பட்டனர்.

பு. க, க. இந்த பிற்போக்குச் சக்திகளுக்கு எதிராக சுதந்திர வர்த்தக வலயத்தினதும் மற்றும் இடங்களினதும் தொழிலாளர்கள் ஒடுக்கப்படும் மக்களதும் தொழில், ஜனநாயக உரிமைகளின் பேரில் போராடுகின்றது. அத்தோடு இந்த உரிமைகளை வென்றெடுப்பதானது அனைத்துலக சோசலிசத்தின் ஒரு பாகமெனவும் கணிக்கிறது, இலங்கையில் முதலாளித்துவ இலாப அமைப்பைத் தூக்கி வீசி தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினை அதாவது இலங்கை — தமிழ் ஈழம் சோசலிசக் குடியரசினைக் கட்டியெழுப்புவதில் இது தங்கியுள்ளது எனவும் சுட்டிக்காட்டுகின்றது. அனைத்துலக ரீதியில் சுரண்டும் உலகச் சந்தையுள் தொழிலாளர் தள்ளப்பட்டுள்ள ஒரு நிலையில் அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்துடன் ஒன்றிணைவது அத்தியாவசியம் என பு.க.க. வலியுறுத்துகின்றது.

கொழும்பு - 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.